# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 13 புதன்கிழமை (29-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:276


# அரசு - ஐ.தே.க. பேச்சு தோல்வியில் முடிந்தது!

## உப ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் குறித்து முரண்பாடு

கொழும்பு,ஓகஸ்ட்29

**தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு சமரசத் தீர்வு காணும் முயற்சியாக தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது குறித்து அரசுத் தரப்புக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களாக நடந்த பேச்சுக்கள் எதிர் பார்க்கப்பட்டபடி நேற்றிரவு - பயன் ஏதுமின்றி - தோல்வியில் முடிவடைந்தன.**

**உப ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகள் தொடர்பாக இரு கட்சிகளுக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடே பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்த தற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.**

அரசுத்தரப்பின் பிரதிநிதிகளும் ஐ.தே.கட்சிப் பிரதிநிதிகளும் நேற்றுப பகல் மூன்றாவது நாளாக கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் கூடிப் பேச்சுக்களை நடத்தினர்.

அரசமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டுள்ளவாறு -

ஏனைய அமைச்சர்களையும் அமைச்சுக்களின் செயலாளர்களை யும் நியமிக்கக்கூடிய அதிகாரம் உடைய பிரதமர் பதவி தேசிய நல்லி ணக்க அரசின் கீழ் ரணில் விக்கிரம சிங்கவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐ.தே.க. பிரதிநிதிகள் தெரி வித்தனர்.

ஆனால் இந்தக் கோரிக்கை அர சுத் தரப்புப் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதேசமயம் -

தனது பிரதமர் பதவியை ரணி லுக்கு விட்டுக்கொடுக்கும் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு உப ஜனா திபதிப் பதவி வழங்கப்படுவதை ஐ.தே. கவினர் எதிர்க்கக்கூடாது என்று அர சுத் தரப்பு பிரதிநிதிகள் வலியுறுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலாளருக்கு மகஜர்

வவுனியா,ஓக.29

ஸ்ரீலங்கா அரசாங்கம் இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்தது தொடர்பாக வன்னி பிரஜைகள் குழு, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கோபி அனானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யுத்தத்தில் தொடர்ந்து தோல்வி யைத் தழுவிவரும் ஸ்ரீலங்கா இராணு வத்தினர், தமிழ் மக்களை இன ரீதி யால் அழிப்பதற்கு 64 மில்லியன் டொல ருக்கு தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வாங்கியிருப்பது அதிர்ச்சியையும், கவலையையும் ஏற் படுத்தியிருப்பதாக அந்த மகஜரில் தெரி விக்கப்பட்டுள்ளது. (க-9)

## கண்ணியில் டிராக்டர் சிதறியது; ஐந்து படையினர் உயிரிழப்பு!

### கல்மடுப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

வவுனியா,ஓக.29

வவுனியா நகருக்கு மேற்கே 15 மைல் தூரத்தில் உள்ள காவலரணில் கடமையில் இருந்த படையின ருக்கு உணவு எடுத்துச்சென்ற டிராக் டர் கல்மடுப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியதில் அதில் சென்ற ஐந்து படையினரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந் தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

இதேவேளை -

வவுனியா நகரை அண்டிய பகுதி களில் விடுதலைப் புலிகளின் தாக்கு தல்கள் அதிகரித்து வருவதை அடுத்து நகரில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக் கிறது.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் பாவற்குளம் என்னும் இடத்தில் இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் மேஜர் ஒருவர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (க-3-9)

## வடக்கு - கிழக்கு ஆக்கிரமிப்புப் பிரதேசம்: சர்வதேச மாநாட்டுப் பிரகடனம் தயார்!

டேர்பன்,ஓக.29

"இலங்கையின் வடக்கு - கிழக்கு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம்" இப்படி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று தென் னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடை பெறும் இனவாதத்துக்கு எதிரான சர்வதேச மாநாட்டை ஒட்டி நடைபெற விருக்கும் மற்றொரு கூட்டத்தில் நிறை வேற்றப்படவிருக்கின்றது.

ஐநாவின் ஏற்பாட்டில் நடைபெறும் - இனவாதத்துக்கு எதிரான - இந்த சர்வதேச மாநாடு டேர்பன் சர்வதேச மையத்தில் எதிர்வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் (31, முதலாம் திகதிகளில்) நடைபெறவுள்ளது.

இதையொட்டி அதே மையத்துக்கு அருகில் அரச சார்பற்ற நிறுவனங்க ளின் இணையம் நேற்று முதல் எதிர் வரும் சனிக்கிழமை (முதலாம் திகதி) வரை சர்வதேச மாநாடு ஒன்றை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் பேச தலைவர்களை தேடித்திரியும் அரச தரப்பினர்!

கொழும்பு,ஓக.29

ஜே.வி.பிக்கும் அரசதரப்புக்கும் இடையிலான பேச்சு முன்னேற்றம் ஏதும் ஏற்படாத நிலையில் அந்த ரத்தில் தொங்கிக்கொண்டிருக்க -

ஜே.வி.பியுடன் சமரசப் பேச் சைத் தொடரும் முயற்சியாக அக்கட் சியின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ள அரசுத்தரப்பு நேற்றும் நேற்றுமுன்தினமும் முயற்சித்தது.

கொழும்பில் அவர்கள் எவருட னும் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் -

அவர்களின் கைத்தொலைபேசி மூலமோ அல்லது தரைவழித் தொலைபேசி மூலமோ அவர்களு டன் அரசுத்தரப்பினால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (க-3)

### நாடாளுமன்றில் பெரும்பான்மை

## எதிரணி விருப்புக்கு இடமளிக்க இணங்கினார் சபாநாயகர்!

கொழும்பு,ஓக.29

எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை இருப் பதால் நாடாளுமன்ற நடவடிக்கை களை எதிர்க்கட்சித் தரப்பின் விருப்பு களுக்கு அமையவே மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா ஏற்றுக் கொண் டுள்ளார் என்று இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 115 பேரைக் கொண்டுள்ள எதிர்க்கட்சித் தரப்பு பெரும்பான்மையினராக உள்ளனர் என்பதைத் தாம் ஏற்பதாகவும் சபா நாயகர் அனுரா பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித் தார் என்றும் அந்த இணையத்தளச் செய்தி தெரிவித்தது. (உ)

### கடற்படைக்கு ஆலோசனைகள் வழங்க

## பாகிஸ்தான் தளபதி கொழும்புக்கு விஜயம்

கொழும்பு,ஓக.29

ஸ்ரீலங்கா - பாகிஸ்தான் கடற் படைகளின் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதற்காக பாகிஸ் தான் கடற்படைத் தளபதி அட்மிரல் அப்துல் ஹஸிக் மிஸ்ரா நான்கு நாள் விஜயமாக நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் அழைப்பை ஏற்று அவர் ஸ்ரீலங்கா வுக்கு வருகை தந்திருப்பதாக அறிவிக் கப்பட்டது.

ஸ்ரீலங்காவின் கடற்படை நடவடிக் கைகள் மற்றும் கொழும்புத் துறை முகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகி யவை குறித்தும் அவர் பரிசீலிப்பது டன் ஆலோசனைகளையும் வழங்கு வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(உ)

## வவுனியா வாசிகள் இருவரை காணவில்லை

வவுனியா,ஓக.29

வவுனியாவைச் சேர்ந்த இருவர் குறித்து தகவல் இல்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவு னியா அலுவலகத்தில் முறைப்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா, திருநாவற்குளத்தைச் சேர்ந்த குமாரசிங்கம் தியாகராசா (வயது20) என்பவர் கடந்த 21 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

கொழும்பு கோட்டை இராணுவத் தினரால் கைது செய்யப்பட்டு இவர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குருமண்வெளி சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு,ஓக.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்புப் பகுதியிலுள்ள குருமண்வெளிக் கிராமம் நேற்று அதிகாலை ஸ்ரீலங்கா விசேட அதிர டிப்படையினரால் சுற்றிவளைக்கப் பட்டு கடுமையான தேடுதல் நடத்தப் பட்டுள்ளது.

குருமண்வெளி, மண்டூர், களுவாஞ் சிக்குடி ஆகிய இடங்களில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்களில் இருந்து சென்ற விசேட அதிரடிப் படையினரே இத்தேடுதலை நடத்தினர்.

ஒலிபெருக்கி மூலம் 15வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் குருமண்வெளி துறையடிக்கு செல் லுமாறு அறிவிக்கப்பட்டு முகமூடி கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். (க-9)

### 'சென்ட்ரல் காம்ப்' தாக்குதலை அடுத்து

## மட்டு. படை முகாம்களில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

மட்டக்களப்பு,ஓக.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படைமுகாம்கள் மற்றும் மினி முகாம் கள் அனைத்தும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. முகாமைச் சூழ உள்ள பிரதேசங்கள் துப்புரவாக்கப்பட்டு காவ லரண்களும் பலப்படுத்தப்பட்டு வரு கின்றன.

மட்டக்களப்பு நகருக்கு அண் மித்து உள்ள மயிலம்பாவெளி படை முகாமில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - அம்பாறை எல்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைப் பகுதியை நோக்கி பல்குழல் எறிகணை வீச்சு!

வவுனியா,ஓக.29

வவுனியா நகரின் எல்லைப் பகுதி களில் தாக்குதல்கள் அதிகரித்துள் ளதை அடுத்து வவுனியா நகர முகாம் மற்றும் பம்பைமடு முகாம் ஆகிய வற்றில் இருந்து புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள ஓமந்தைப் பகுதியை நோக்கி நேற்று மாலை அகோர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பம்பைமடு முகாமில் இருந்து பல் குழல் 'லோஞ்சர்'கள் மூலம் அடுத்த டுத்து ஏவப்பட்ட ஷெல்களால் நக ரம் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

இந்த ஷெல் தாக்குதல் சுமார் 15 நிமிடம் நீடித்ததாகவும் -

இதனால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை என்றும் - தெரி விக்கப்பட்டது. (க-3-9)

## தென்மராட்சிக் களத்தில் உயிரிழந்த புலிகள் மூவர்

வவுனியா,ஓக.29

தென்மராட்சியில் முகமாலை மற் றும் கிளாலிப் பகுதிகளில் கடந்த 26 ஆம் திகதி படையினர் மேற் கொண்ட மும்முனைப் படை நடவ டிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்த மூவரின் பெயர் விவரங் களை விடுதலைப் புலிகள் அறிவித் துள்ளனர்.

☆ கப்டன் இளஞ்சுடர் (சுப்பிர மணியம் சிவராசா - யாழ்ப்பாணம்).

☆ 2 ஆம் லெப். மன்னன் (சுந்தர லிங்கம் சிவகுமார் - யாழ்ப்பாணம்).

☆ 2 ஆம் லெப். அறிவமுதன் (ஆரோக்கியசாமி கமிலப்போல் - மன்னார்) ஆகியோரே அந்த மூவரும் ஆவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 700 தமிழ்க் கைதிகளின் மகஜரை அடுத்து

# களுத்துறை சிறைக்குச் செல்ல தொல்லை தவிர்ப்புக்குழு முடிவு

கொழும்பு,ஓக.29

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து நேரில் அறிய தொல்லை தவிர்ப்புக் குழு அங்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருக்கின்றது.

நீதி அமைச்சர் பட்டிவிரக்கோன தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய தொல்லை தவிர்ப்புக் குழுவின் கூட்டத்திலேயே இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் பெரும் இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர் என்றும் -

அவற்றை நேரில் ஆராயக் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என்றும் - தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் தொல்லை தவிர்ப்புக்குழு உறுப்பினருமான இரா.சம்பந்தன் அங்கு தெரிவித்தார்.

அதை அடுத்தே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700 தமிழ்க் கைதிகள் கூட்டாக தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

தங்களில் 90 சதவீதமானவர்களுக்கு எதிராக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டுள்ளன என்றும் -

போதிய நீர்வசதி, மின்சாரவசதி இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் - அந்த மகஜரில் தெரிவித்திருந்தனர்.

இந்த மகஜர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட 15 க்கும் மேற்பட்ட அமைப்புக்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. (க-3)

## தவில் வித்துவானும் உதவியாளரும் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டனர்

### உடைமைகள் அனைத்தும் அபேஸ்

பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டு பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள மலேசியாவில் இருந்து வருகை தந்த தவில் வித்துவானும் அவரது உதவியாளரும் ஓட்டோவில் கடத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு அவர்களிடம் இருந்த உடைமைகள் அனைத்தும் அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மலேசியாவில் இருந்து வந்த அளவெட்டி முருகதாஸ்(வயது 40) என்ற தவில் வித்துவான் மற்றும் அவரது உதவியாளரான பிரசாத் (வயது 19) ஆகியோருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

இருவரும் பஸ்ஸுக்காக பம்பலப்பிட்டியில் காத்திருந்த சமயம் ஓட்டோவில் வந்த நால்வர் சி.ஐ.டி பொலீஸார் எனத் தெரிவித்து பலவந்தமாகக் கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## மொழித்திறன் விருத்தி செயற்றிட்டம்; தென்மராட்சி மாணவர் 400 பேர் தெரிவு

தென்மராட்சி,ஓக.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் கல்வி கற்கும் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்கள் 'யுனிசெவ்' நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்படும் மொழித்திறன் விருத்தி செயற்றிட்ட செயற்பாட்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் அதிபர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

நாவற்குழி ம.வி., மீசாலை விக்னேஸ்வரா ம.வி., மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., கைதடி விக்னேஸ்வரா வித்தி., கைதடி குருசாமி வித்தி., மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி. -

மட்டுவில் கமலாசனி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி., மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி., வரணி ம.வி., விடத்தற்பளை கமலாசினி வித்தி., இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி. -

கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கிளாலி றோ.க.த.க. பாடசாலை, பளை மத்திய கல்லூரி, முகாவில் அ.த.க.பாடசாலை, மாசார் அ.த.க.பாடசாலை. (க-117)

## வல்லிபுர ஆழ்வார் உற்சவ காலத்தில்

# கிராமகோட்டடிச் சந்தியிலிருந்து செல்லும் வீதியைத் திறக்குக!

### தளபதியிடம் கோரிக்கை

தென்மராட்சி,ஓக.29

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாவதையொட்டி உற்சவம் தொடர்பான கூட்டம் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது.

மஹோற்சவ காலத்தில் தற்போது பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ள கிராமக் கோட்டடிச் சந்தியிலிருந்து செல்லும் வீதியைத் திறந்துவிடுமாறும் -

சப்பறம், தேர், சமுத்திரத்தீர்த்தம், கேணித்தீர்த்தம் ஆகிய உற்சவ தினங்களில் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறும் -

சமுத்திரதீர்த்தத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன்கருதி பாதுகாப்பு அரண் ஊடாகச் செல்வதற்குரிய பாதையொன்று திறந்துவிடவும் படையணி தளபதியைக் கோருவது என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மஹோற்சவ காலத்தில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் பொருட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களை மந்திகை ஊடாகவும், தனியார் வாகனங்களை பருத்தித்துறை தும்பளை வீதி வழியாக சேவைகளில் ஈடுபடுத்தவும் -

ஏனைய பணிகளை சென்ற வருடங்களைப் போன்று அந்தந்த திணைக்களத்தினரும் தொண்டர் நிறுவனங்களும் மேற்கொள்ள அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (க-117)



'இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம்' என்னும் நூலின் அறிமுக விழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை வகித்த கலாநிதி க.குணராசா நூலாசிரியர் அரியாலையூர் சி.சிவதாசனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் 'சந்திரமதி' வி.கே.இரத்தினம் அமர்ந்துள்ளார். (ஐ)

### றோட்டரக்ட் கழக ஏற்பாட்டில் கருத்தரங்கு

வலி.வடக்கு,ஓக.29

யாழ்நகர் மைய றோட்டரக்ட் கழகத்தினர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு இருக்கும் மாணவ, மாணவிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கு 'கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக மற்றும் கணனித்துறை சார்ந்தவர்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-86)

### சிறுப்பிட்டியில் தேடுதல்

நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

வீடுவீடாகச் சென்ற படையினர் குடும்பப்பதிவு அட்டைகள் மற்றும் அடையாள அட்டைகளைச் சோதனையிட்டனர். (க-3-72)

### அத்திவாரக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஓக.29

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் பிரதான மண்டபத்திற்கான அத்திவாரக்கல் நடும் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாசாலை அதிபர் ந.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பியின் காங்கேசன்துறைத் தொகுதி அமைப்பாளர் தி.சிவகுமார் கலந்து சிறப்பிப்பார்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.29

வலி.வடக்கு பிரதேச சபையினால் நீர்வேலியில் அமைக்கப்படவுள்ள சந்தைக்கான அத்திவாரக்கல் நடும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் பூ.குணசிங்கம் அத்திவாரக்கல்லை நட்டுவைப்பார். (க-3)

### சனசமூக நிலைய நன்கொடை கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.29

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான இந்த வருட நன்கொடை வழங்கப்படவிருப்பதாக சபையின் செயலாளர் இ.சு.சிவராசா அறிவித்துள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களின் செயலாளர்கள் கூட்ட அறிக்கை, வங்கிப் புத்தகம், நிலைய றப்பர் முத்திரை ஆகியவற்றுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இருபாலையில் இயங்கிவரும் சபையின் தற்காலிக அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-3)

## இந்திய மீனவர்கள் 13 பேர் யாழ். சிறையில் உண்ணாவிரதம்

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 இந்திய மீனவர்களும் தம்மை விடுவிக்கக்கோரி நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று யாழ். நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து யாழ்.நீதிவான் ஆர்.ரி. விக்னராஜாவின் உத்தரவுப்படி அவர்கள் நேற்று நண்பகல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தம்மை விடுவித்து தாயகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரி மீனவர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதம் குறித்து நீதிவான் சட்டமா அதிபரின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டுவந்தார்.

பிரஸ்தாப மீனவர்களின் விவரங்களைத் தமக்கு அனுப்பும்படி சட்டமா அதிபர் கோரியதாகவும் -

அதன் பின்னர் அந்த விவரங்கள உடன் சட்டமா அதிபருக்கு 'பக்ஸ்' மூலம் அனுப்பப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் விவரங்களைப் பரிசீலனை செய்த சட்டமா அதிபர் அவர்களை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக நீதிவானுக்கு அறிவித்தார்.

இந்த விவரத்தை மீனவர்களிடம் தெரிவித்த நீதிவான் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரினார். அதன்படி மீனவர் தமது உண்ணாவிரதத்தை நேற்றுப் பிற்பகலில் கைவிட்டனர். (க-3-6)

## மன்னார் இளைஞருக்கு நஷ்டஈடாக 25 ஆயிரம் ரூபா வழங்க உத்தரவு

புலிகள் இயக்கத்திடம் பயிற்சி பெற்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அழகர்சாமி திலீப்குமார் என்ற இளைஞருக்கு 25 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்குமாறு நேற்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் எழுதூரைச் சேர்ந்த திலீப்குமார் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் விசாரணைக்கென யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார் பின்னர் அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

இது குறித்து உயர் நீதிமன்றில் அவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த நீதியரசர்களான மார்க் பெர்னான்டோ, எம்.டபிள்யூ.டி.வடுகொடபிட்டிய, அமீர் இஸ்மாயில் ஆகியோர் சந்தேக நபருக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்குமாறு உத்தரவிட்டனர்.

சந்தேக நபர் சித்திரவதை செய்யப்பட்டமை மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது -

சந்தேக நபரான திலீப்குமாருக்கு எதிராக வழக்குத் தொடரமுடியுமா, இல்லையா என்பதை அடுத்த தவணையின்போது நீதிமன்றில் தெரிவிக்குமாறு அரச சட்டத்தரணிக்கு நீதியரசர்கள் உத்தர விட்டனர். (க-9)

## அரசு–ஐ.தே. கட்சி பேச்சு; சந்திரசேகரன் அதிருப்தி

கொழும்பு,ஓக.29

அரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் தொடர்பாக மலையக மக்கள் முன்னணி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

சிறுபான்மைக் கட்சிகளை ஓரங்கட்ட நினைக்கும் சக்திகள்தான் புதுவிதமான அரசியலைத் தோற்றுவிக்க தேசிய கட்சிகளுக்கு தூபம் போடுவதாகவும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் யுத்தத்தைப் பற்றியோ அல்லது இனப்பிரச்சினையைப் பற்றியோ எந்தவித ஆலோசனையையும் முன்வைக்கவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் வேண்டாம் என்ற நிபந்தனையைத்தான் முன்வைத்துள்ளது போலத்தெரிகிறது. இந்த நிலையில் செயற்கையாக புதிய அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் அதனால் சிறுபான்மை மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைப்பதற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை. இந்த முயற்சி சிறுபான்மை மக்களின் பிரச்சினையை மேலும் பல வருடங்களுக்குத் தள்ளிவைக்குமே தவிர, எந்தவித பயனையும் தரமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## திவ்வியனை தாயார் சந்திக்க அனுமதிக்குமாறு நீதிபதி பணிப்பு

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை அவரது தாயார் மாதத்தில் ஒரு தடவை சந்திக்க அனுமதிக்குமாறு யாழ்.சிறைச்சாலை பதில் ஆணையாளருக்கு யாழ் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்நீதிமன்றத்தில் நேற்றுப் பலத்த பாதுகாப்புடன் திவ்வியன் ஆஜர் செய்யப்பட்டார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திவ்வியனை அவரது தாயார் பார்வையிடுவதற்கான அனுமதிக் கடிதத்தை வழங்குவதற்கு அவரது இருப்பிடமான வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மறுத்துள்ளதாக நீதிவானின் கவனத்துக்கு திவ்வியன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிரஸ்தாபித்தார்.

அனுமதியை மறுத்தமைக்கான காரணத்தை மன்றுக்கு எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறு வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, நீதிவான் உத்தரவிட்டார்.

திவ்வியனிடம் இருந்து கைப்பற்றியதாகக் கூறி காங்கேசன்துறை பொலீஸாரினால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட ஆயுதங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தவில்லை என்று பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

திவ்வியனை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (க-3-6)

## முகைதீன் எம்.பி. உயர் நீதிமன்றில் பேரியலுக்கு எதிராக மனுதாக்கல்

கொழும்பு,ஓக.29

தேசிய ஐக்கிய முன்னணியில் இருந்து தம்மை நீக்கியது சட்ட விரோதமானது எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி. முகைதீன் அப்துல்காதர் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தன்னை கட்சியில் இருந்து நீக்குவதற்கு தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப்புக்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி ஜி.ஜி.அருட்பிரகாசம் ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் உட்பட மேலும் சிலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு எதிர்வரும் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (க-9)

# அமெரிக்க கண்காணிப்பு விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவிப்பு

பாக்தாத்,ஓக.29

தனது வான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பறந்த அமெரிக்க விமானப் படையின் கண்காணிப்பு விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக் வான் பரப்பைக் கண்காணிக்கச் சென்ற தமது ஆளில்லா உளவு விமானம் மீண்டும் திரும்பவில்லை என்று அமெரிக்க விமானப்படையினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

பத்தாண்டுகளின் முன்னர் குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததற்காக, ஈராக் வான் பறப்பை மேற்கொள்ள ஐ.நா. தடைவிதித்தது.

இந்தத் தடையை அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் விமானப்படை விமானங்கள் கண்காணித்து வந்தன.

அவ்வாறு கண்காணிப்பில் ஈடுபட்ட விமானங்களின் மீது ஈராக் படையினர் அவ்வப்போது விமான எதிர்ப்புத் தாக்குதல்களை நடத்துவதும், அவற்றுக்குப் பதிலடியாக அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்கிய நிலைகள் மீது தாக்குதல் மேற்கொள்வதும் அடிக்கடி இடம் பெற்றுவந்தன.

இந்த நிலையில், அமெரிக்க உளவு விமானத்தை ஈராக் சுட்டு வீழ்த்தியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குப் பதிலடியாக அமெரிக்க விமானங்கள் ஈராக் மீது தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

# தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு 'சேர்ட்' இன்றி வந்த உறுப்பினர்

தமிழக சட்ட சபைக்கு நேற்று 'சேர்ட்' அணியாமல் வந்த சட்டமன்ற உறுப்பினர் பெண் உறுப்பினர்களின் எதிர்ப்பையடுத்து சட்ட மன்றத்திலிருந்து வெளியேறினார்.

வந்தவாசித் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான - பா.ம.கவைச் சேர்ந்த முருகவேள்ராஜன் சட்டப் பேரவைக்கு சட்டை அணியாமல் வந்தார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 4 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகத் தான் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு சபை அனுமதியளிக்காததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், தேவேந்திர குல வேளாள இனத்தவருக்கு அமைச்சரவையில் இடமளிக்கப்படாததை ஆட்சேபித்தும் சட்டப் பேரவைக்குத் தான் 'சேர்ட்' அணியாமல் வந்ததாக ராஜன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர்களான வளர்மதி ஜெயராஜ் மற்றும் வளர்மதி உட்பட அ.தி.மு.க. பெண் உறுப்பினர்கள் ராஜனின் செயலுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து பேரவைத் தலைவர் கா.காளிமுத்து, ராஜன் குறிப்பிட்ட பிரச்சினைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர உறுப்பினர் இத்தகைய வழியைக் கையாளக்கூடாது என்றார்.

இதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் முருகவேள்ராஜன் சபையை விட்டு வெளியேறினார்.

## படுகொலை செய்யப்பட்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்

# பூலான்தேவி சொத்துப் பிரச்சினை; டில்லி பொலீஸ் வழக்குத் தாக்கல்

புதுடில்லி,ஓக.29

சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கொள்ளைக்காரியுமான பூலான் தேவியின் சொத்துக்களுக்கு யார் வாரிசு என்பதனைத் தீர்மானிக்க புதுடில்லி பொலீஸார் நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளனர்.

இது தொடர்பாக டில்லி நகர நீதிமன்றத்தில் பொலீஸார் வழக்கு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளனர்.

பூலான்தேவி சிறையிலிருந்து பொது மன்னிப்புப் பெற்று விடுதலையாகிய பின்னர் மணம் முடித்த உமேஷ் சிங் பூலான்தேவியின் சொத்துக்களுக்குத் தானே வாரிசு என்று கூறி வருகிறார்.

இதேசமயம், உமேஷ் சிங்குக்கு முன்னரே திருமணமாகி மனைவியும் 2குழந்தைகளும் இருப்பதாகவும் - சொத்துக்களுக்கு ஆசைப்பட்டே அவர் பூலான்தேவியை மணம் முடித்ததாகவும் -

பூலான்தேவியின் நேரடி இரத்த உறவினர்கள் தெரிவித்துள்ளதுடன், பூலான்தேவியின் சொத்துக்கள் தமக்கே சேரவேண்டும் என்றும் கோரி வருகின்றனர்.

இந்தச் சொத்துப் பிரச்சினையால் இரு தரப்பினரிடையே சில மோதல் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதனால் பூலான்தேவியின் சொத்துக்களுக்கு யார் வாரிசு என்பதை தீர்மானிக்கவும் அதுவரை நீதிமன்றப் பொறுப்பில் பூலான்தேவியின் சொத்துக்களைப் பராமரிக்கவும் டில்லி பொலீஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இதுதொடர்பான விசாரணையை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

'பண்டிட் குயின்' திரைப்படத்தின் கதைக்காக பூலான்தேவிக்கு வழங்கப்பட்ட ஒரு கோடி இந்திய ரூபா வங்கியொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 'டான்ஸி' வழக்கில் மேன்முறையீட்டு விசாரணை

சென்னை,ஓக.29

'டான்ஸி' நில பேர ஊழல் வழக்கில் சென்னை தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா தாக்கல் செய்த 3 மேல் முறையீட்டு மனுக்கள் உட்பட இந்த வழக்குத் தொடர்பான 17 மனுக்கள் மீதான விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படாது என்றும் -

தொடர்ந்து விசாரணை நடத்தி விரைவில் முடிவு வெளிவரும் என்றும் நீதிபதி தெரிவித்தார். (ஒ)

# தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் பா.ம.க., திரிணாமுல் காங்கிரஸ்

புதுடில்லி,ஓக.29

இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியையும் திரிணாமுல் காங்கிரஸையும் சேர்த்துக்கொள்வதென அக்கூட்டணி முடிவு செய்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டதாக, கூட்டணியின் அமைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

மீண்டும் சேர்க்கப்பட்ட இந்த இரு கட்சிகளின் உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படுமா என்று பெர்னாண்டஸிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, 'அது பிரதமரின் தனிப்பட்ட உரிமை' என்று அவர் பதிலளித்தார்.

பா.ம.க. மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்ததையடுத்து, நாடாளுமன்றத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலம் 304 ஆக உயர்ந்துள்ளது. இதேசமயம் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் தி.மு.கவுடன் பாட்டாளி மக்கள் கட்சி இணைந்து செயற்படுவது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி உறுதியான முடிவை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## பீஹாரில் வெள்ளம்; 30 லட்சம் பேர் பாதிப்பு!

பாட்னா,ஓக.29

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் கடந்த 5 நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக சுமார் 30 லட்சம் பேர் இருப்பிடங்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

ஆறுகளில் நீர் மட்டம் வேகமாக அதிகரித்து வருவதால், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர். இந்த வெள்ளத்தினால் சுமார் 735 கோடி ரூபா அளவிற்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

## 150 பெண்களை வல்லுறவுக்குட்படுத்திய நபர் கைது!

மெக்ஸிக்கோ,ஓக.29

மெக்ஸிக்கோவில் உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டுபவர் போல் நடித்து சுமார் 150பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய மொன்டெரோ படில்லா என்பவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பாலியல் வல்லுறவுக் குற்றத்துக்காக கைதாகி வழக்கை எதிர் நோக்கியிருந்த போது 1991இல் சிறையிலிருந்து தப்பிச்சென்ற படில்லா தேவாலயம் ஒன்றில் வழிபாடுகளில் கலந்துகொண்ட சமயத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

# திரைப்பட நடிகர் விஜயகாந்துக்கு சிறந்த இந்தியக் குடிமகன் விருது

புதுடில்லி,ஓக.29

தமிழ்த் திரைப்பட நடிகர் விஜயகாந்த் உட்பட இந்தியாவின் பெருமையை நிலைநாட்டும் வகையில் பல்வேறு துறைகளில் சிறந்த சேவையாற்றியவர்களுக்கு சிறந்த குடிமகன் விருதுகள் வழங்கப்பட்டன.

1987ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் இந்த விருதை, இந்த ஆண்டு புதுடில்லியில் நடந்த விழாவில் ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் தலைவர் நீதிபதி பி.என்.பகவதி வழங்கினார்.

இந்தி நடிகர் ஹிரிதிக் ரோஷன், நடிகை மாதுரி தீட்சித் ஆகியோருக்கும் சிறந்த குடிமகன் விருது வழங்கப்பட்டது.

தனது பிறந்தநாளன்று இந்த விருது தனக்கு வழங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக விஜயகாந்த் தெரிவித்தார். (ஒ-4)



சீனாவில் அன்குயி மாகாணத்தின் தலைநகர் கெபேயில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் எடுக்கப்பட்ட ஆச்சரியத்தை ஏற்படுத்தும் புகைப்படம் இது.

பிறந்து இருபது நாள்களான சிங்கக் குட்டிக்கும் நாற்பது நாள்களான புலிக்குட்டிக்கும் நாயொன்று பாலூட்டி வளர்த்து வருகிறது.

பொதுவாக நாய்களும் பூனை வகைப் பிராணிகளும் எதிரிகளாகவே உள்ளன. ஆனால் அந்த இயற்கை நடைமுறைக்கு முற்றிலும் மாறாக, சிங்கக் குட்டியும் புலிக்குட்டியும் தத்தமது தாய்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதால் பால் கிடைக்காத நிலையில் மிருகக் காட்சிச் சாலைப் பணியாளர்களால் வளர்க்கப்படும் நாயில் பால் குடித்து வளர்கின்றன. மிருகங்களிடமிருந்து மனிதன் கற்கவேண்டிய எவ்வளவோ விடயங்களில் இந்த அன்புப் பரிமாற்றமும் ஒன்று.

## மஸிடோனியாவில் இடம்பெறும்

# ஆயுதக் களைவின் முதல்நாளிலேயே 'நேட்டோ' படைவீரர் உயிரிழப்பு!

மஸிடோனியாவில் அல்பேனியத் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் தனது பணியை 'நேட்டோ' படை ஆரம்பித்த நேற்று முன்தினம், 'நேட்டோ' படையில் அங்கம் வகிக்கும் பிரிட்டிஷ் இராணுவ வீரர் ஒருவர் அடையாளம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.

பிரிட்டிஷ் வீரர் காரில் பயணித்த சமயம், பாரிய 'கொங் கிரீட்' கல் ஒன்று அவர் சென்ற கார் மீது வீசப்பட்டதாகவும் -

அந்தக் கல் காரின் ஜன்னல் வழியே உள்ளே விழுந்து, அந்த வீரைப் படுகாயப்படுத்தியதையடுத்து அவர் உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஆயுதக் களைவை விரும்பாத அல்பேனியத் தீவிரவாதிகளே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தால் மஸிடோனியாவில் அல்பேனியத் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் தமது பணியில் பாதிப்பெதுவும் ஏற்படப் போவதில்லை என 'நேட்டோ' படை தெரிவித்தது. (ஒ-4)

# 350 சட்டவிரோதக் குடியேறிகள் இத்தாலிக் கடற்பகுதியில் கைது!

ரோம்,ஓக.29

துருக்கியிலிருந்து மீன்பிடிப்படகொன்றில் இத்தாலி நோக்கிச் சென்ற 350க்கும் மேற்பட்ட சட்டவிரோத குடியேற்ற வாசிகளைக் கைது செய்துள்ளதாக இத்தாலிக் கடலோரக் காவற்படையினர் தெரிவித்தனர்.

துருக்கி நாட்டில் பதிவு செய்யப்பட்ட 25 மீற்றர்கள் நீளமான மீன்பிடிப்படகு நேற்றுமுன்தினம் மாலை அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டது.

துருக்கியிலிருந்து கடந்த புதன் கிழமை இத்தாலி நோக்கிப் புறப்பட்ட இந்தப் படகில் 354 பேர் இருந்தனர். அவர்களில் பெரும் பாலானவர்கள் ஈராக்கின் குர்திஷ் இனத்தவர்களாவார்கள். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிலரும் படகில் இருந்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

## நோர்வே கப்பலால் காப்பாற்றப்பட்ட

# அகதிகளை நாட்டுக்குள் ஏற்க ஆஸ்திரேலிய அரசு மறுப்பு

சிட்னி,ஓக.29

நோர்வே நாட்டுக் கப்பலில் உள்ள அகதிகளை நாட்டுக்குள் விடப்போவதில்லை என்று ஆஸ்திரேலியா உறுதிபடக் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தான், இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 430 அகதிகள், படகு ஒன்றில் நடுக்கடலில் தவித்த சமயம், நோர்வே நாட்டுக் கப்பலான 'பிராகோ' அவர்களை காப்பாற்றியது.

கப்பலில் ஏறியதும், ஆஸ்திரேலியாவுக்குத் தம்மை கொண்டு செல்லும்படி அகதிகள் வற்புறுத்தியதையடுத்து 'பிராகோ' கப்பல் ஆஸ்திரேலியா சென்றது.

ஆனால் அவர்களை நாட்டுக்குள் நுழையவிடப் போவதில்லை என்று ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதனையடுத்து ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள தீவு ஒன்றில் இந்த அகதிகள் தற்காலிகமாக இறக்கிவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## நாளை பேச்சு நடத்த வருமாறு

# மாவோயிஸ தீவிரவாதிகளுக்கு நேபாளப் பிரதமர் அழைப்பு

கர்த்மண்டு,ஓக.29

நேபாளப் பிரதமர் ஷேக் பகதூர் தேபா கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் மாவோயிஸத் தீவிரவாதிகளை சமாதானப் பேச்சுக்கு நாளை வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக நேபாளத்தில் கம்யூனிஸ ஆட்சியை ஏற்படுத்த மாவோயிஸத் தீவிரவாதிகள் ஆயுத மேந்திப் போராடி வருகின்றனர்.

மாவோயிஸத் தீவிரவாதிகளின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதமர் தேபா முதற்றடவையாக பேச்சுக்கான திகதியை அறிவித்துள்ளார்.

நாட்டின் ஆட்சியை வன்முறை மூலம் கவிழ்ப்பதற்கு மாவோயிஸத் தீவிரவாதிகள் முற்பட்ட பின்னர், முதற்றடவையாக இருதரப்பினருக்குமிடையே சந்திப்பு இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# காலத்தினாற் செய்த உதவி

# 'முதுமை' நூலின் வெளியீடு

**நூல் வரிசை**

சாந்திகம் வெளியீடாக வந்துள்ள முதுமை என்னும் நூல் பற்றியதொரு விவரிப்பு. ஆரோக்கியமான முதுமையை இலக்காகக் கொண்ட பத்துக் கட்டுரைகளை இந்தப் புத்தகம் தன்னகத்தே தாங்கியுள்ளது. இந்த வெளியீட்டினை ஒரு கட்டுரைத் தொகுப்பாகக் காண்பதை விட, நன்கு திட்டமிட்டு இயற்றப்பட்ட நோக்கொருமை கொண்ட ஓர் ஆக்கம் என்று சொல்வதே பொருத்தமாயிருக்கும்.

நூலின் முன்னுரையில் ஓர் இடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போல, வயதானவர்களைப் 'பழசுகள்' என்று கேலியாகச் சுட்டும் வழக்கம் பதினைந்திருபது ஆண்டுகளுக்கு முன்னரே நம்மவரிடையே தலைகாட்டிவிட்ட ஒன்றுதான். என்றாலும், விரைவாக வளர்ந்து செல்லும் உலகமயமாக்கலும், பண்பாட்டுத் திசைமாற்றங்களும் இன்று முதுமையின் பெறுமதியை மறுமதிப்பீடு செய்யும் போக்கினையும் ஊக்கி வருகின்றன.

எனவேதான், முதுமை பற்றிய விளக்கங்களைக் கற்றறிந்து கொள்ள வேண்டிய தேவை நமக்குண்டு. இந்த விளக்கங்கள் வெறும் ஆர்வங்களாகவும், அங்கலாய்ப்புகளாகவும் நின்று விடுதல் போதாது. துறைசார் அறிஞர்களின் பங்களிப்போடு, திடமான அறிவியல் அடிப்படையில், சில தெளிவுகளும் தேர்ச்சிகளும் இன்று அவசியமாகின்றன. இந்த தேர்ச்சியினை ஈட்டுவதிலும், ஊட்டுவதிலும் இப்போதைய ('முதுமை' என்னும் மகுடம் தாங்கிய) இந்த நூல் பெரும் பயன் விளைக்கும் என்றே சொல்லத் தோன்றுகிறது.

வைத்திய கலாநிதி சா. சிவயோகன், பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஆகிய இருவருமே இந்த நூலின் தொகுப்பாசிரியர்களாய் உள்ளனர். 85 பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகத்தில், 10 கட்டுரைகள் உள்ளன. (1) ஆரோக்கியமான முதுமை, (2) முதுமைப் பருவம், (3) தமிழ் மரபில் முதுமை, (4) முதுமை மருத்துவம், (5) முதுமையில் உளவியல் பிரச்சினைகள், (6) அறளை பெயர்தல் (7) குடும்ப அமைப்பில் முதியவர்கள், (8) முதுமையின் சவால்களை எதிர்கொள்ளல், 9) அழகாக முதுமை எய்துதல், (10) இறத்தல் என்னும் தலைப்புகளில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

### செயல்வழி அறிவு

இந்த விளக்கங்களைத் தந்துள்ளவர்கள், அவ்வத்துறையிலே தோய்ந்து ஊறியசெயல் வழி அறிவு பெற்றவர்கள் என்பது மனங்கொள்ளத் தக்கது. மேலெழுந்தவாரியாக விடயங்களைச் சொரிவோரே அதிகமாயுள்ள இன்றைய சூழலில் உறுதியான அறிவாளிகளின் சிந்தனைப் பங்களிப்பு மதிப்புயர்ந்து நிற்கிறது.

முதலில் இடம்பெறும் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் கட்டுரை, இன்றைய மனிதர்களின் சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பு அதிகமாகிக் கொண்டு போவதைப் புள்ளி விவரங்களுடன் வலியுறுத்துகிறது. இந்த அடிப்படையில் முதியோர் தொகைவீதம் ஏறுமுகமாய்ச் செல்வதனால் முதுமை பற்றிய கவனிப்பும் அதிகமாக வேண்டியுள்ளமையை 'நந்தி' நினைவூட்டுகிறார். பின்னர், சுகநிலை, முதிய வயதில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள், மனநிலை என்பன பற்றிச் சுருக்கமான குறிப்புகள் சிலவற்றைச் சுட்டிப்பாகத் தருகிறார். ஆத்மீகம் உடலையும், மனத்தையும் இளமையாக வைத்திருக்க உதவும் என்பது 'நந்தி' அவர்களின் கருத்தாகும்.

வைத்திய கலாநிதி ந. சிவராஜா அவர்கள் முதுமைப் பருவப் பிரச்சினைகளை, உடல் — உளம் — சமூகம் தொடர்பானவை என்று வகுத்துக்காட்டி, அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு, இளமையில் நோய் ஏற்படவிடாது தடுப்பதில் ஈடுபாடு காட்டுதல் வேண்டும் என்று வற்புறுத்துகிறார். 50 வயதளவில் ஒவ்வொருவருக்கும் சலரோகம், உயர்குருதி அமுக்கம், புற்றுநோய், பார்வைக் குறைவு, காது கேளாமை போன்ற குறைபாடுகள் உண்டா என்று சோதித்தறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், அதற்கான கிளினிக்குகள் நடத்தவேண்டும் என்பதும் சிவராஜா அவர்களின் ஆலோசனை ஆகும். ஆளுதவி இல்லாத முதியோர் பொருட்டு நலம் பேணல் மையங்கள் நடத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டுரை போலவே எட்டாவது கட்டுரையும் முதுமையின் சவால்களையிட்டுப் பொதுவாயும், விரிவாயும்பேசுகிறது. இதனை வரைந்துள்ளவர் வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன். மருத்துவ நுண்மொழியை அதிகம் கையாளாமல், அனைவரும் சிரமம் இன்றி விளங்கிக்கொள்ளத் தக்கதாய் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். முதுமையின் சவால்கள் முதியோருக்கு மட்டுமன்றி, அவர் மூலமாக' முழுக்குடும்பத்துக்குமே உரிய பிரச்சினைகளாக அமையும் பாங்கினை நச்சினார்க்கினியன் அவர்கள் நன்கு வலியுறுத்தி உள்ளார். முதுமையின் சவால்கள் சிறந்த முறையில் எதிர்கொள்ளப்படும் ஒரு காலம் வரும் என்று இக் கட்டுரையாளர் கருதுகிறார்.

வாழ்க்கைத் துணைகளை இழந்துவிட்ட ஆண்களும், பெண்களும் சோடி சேர்வதான முதியோர் திருமணங்களைப் பிள்ளைகளே முன்னின்று நடத்தி வைக்கும் தேவை பற்றியும் சிவராஜா அவர்கள் சிந்தித்துள்ளார். ஆளுதவி இல்லாத முதியோருக்கென முதியோர் கிராமங்களைப் பல்வேறு வசதிகளுடனும் ஏற்படுத்தித் தரும் திட்டமொன்று பற்றியும் இக் கட்டுரையிற் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறான கிராமத்தில் வசிப்போருக்கு ஓரளவு 'பிறைவேற்றான' வாழ்வும் கவனிப்பும் பொது ஈடுபாடுகளும் வாய்க்கக்கூடும் என்பது ஒரு புதிய சிந்தனை ஆகும்.

இதுவரை நாம் எடுத்து நோக்கிய மூன்று கட்டுரைகளையும் போல, ஆர். அமரசிங்கம் அவர்களின் 'அழகாக முதுமை எய்துதல்' என்னும் ஆக்கமும் முதுமையின் பிரச்சினைகள் பலவற்றையும் தொகுத்துக் கூறுவதாய் உள்ளது. முதுமையை ஏற்றுக் கொண்டு ஓய்வுக்கு ஆயத்தமாகி, சவால்களை வெற்றிகொள்ளும் வழிமுறைகள் இதில் வலியுறுத்தப்படுகின்றன. இவ்வாறு நளினமாக முதுமை எய்தும் பெரியவர்கள், இளந்தலை முறையினருக்கு அனுபவத் தேறல்களைக் கையளிக்கும் பணியிலும் நன்கு பங்குபற்றக்கூடும் என்ற ஆரோக்கியமான கருத்து, இப்புத்தகத்தின் அடிநாதமாயும் உள்ளமை சுட்டிக் காட்டத் தக்கது.

### மருத்துவ நுணுக்கங்கள்

இதுவரை, பொதுமைப் பாங்கான பரந்த நோக்கில் நின்று எழுதப்பட்ட கட்டுரைகளைப் பார்த்தோம். மற்றொரு வகைக் கட்டுரைகள் மருந்துவத்துறை நுணுக்கங்களிற் சிலவற்றை மக்களுக்கு அறிமுகஞ்செய்ய முனைகின்றன. இவை உடலியற் பிரச்சினைகளையும், உளவியற் பிரச்சினைகளையும் எடுத்துப் பேசுகின்றன. வைத்திய கலாநிதி ஆர். அரியரட்ணம் அவர்கள் முதுமை மருத்துவம்பற்றி எழுதியுள்ளார். துறைசார் மருத்துவ விடயங்களைத் தமிழில் வாசித்துப் பழக்கம் இல்லாதவர்களுக்கு இக் கட்டுரை சற்றுக் கடினமாய்த் தோன்றக் கூடும். ஆனால், மருத்துவ மாணவர்களுக்கு அத்தகைய பிரச்சினை இருக்காது எனலாம். உயிரியல், சமூகவியல் தொடுப்பு இழைய மாற்றங்கள், நோய் எதிர்ப்பாற்றல், பாலியல் உந்தல், நினைவாற்றல், ஆளுமை, நித்திரை முதலிய விடயங்களைமுதுமையுடன்தொடர்புபடுத்தி இக்கட்டுரை விளக்க முயல்கிறது. இதில் எடுத்தாளப்பட்டுள்ள தகவல்களிற் பல, அபிவிருத்தி அடைந்த நாடுகளிற் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டவை ஆகும். எனினும், ஏனைய நாட்டவர்களுக்கும் அத்தகவல்களிலிருந்து பெறப்பட்ட காரணிகள் பொருந்தும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உளவியற் காரணிகளைச் சிறப்பாக எடுத்தாளும் இரு கட்டுரைகள் இப் புத்தகத்தில் உள்ளன. ஒன்று வண. பிதா சூ. டேமியன் அவர்களும், பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களும் இணைந்து எழுதியது. மற்றையது வைத்திய கலாநிதி சா. சிவயோகன் எழுதியது. முதலாவது கட்டுரையில் வண. பிதா அவர்களும், பேராசிரியர் அவர்களும் உளவியல் பிரச்சினைகள் எவ்வாறு உருவாகின்றன என்றும், இப்பிரச்சினைகளை எவ்வாறு தடுக்கலாம், அல்லது இவற்றிலிருந்து நம்மை எப்படிப் பாதுகாத்திடலாம் என்றும், சுருக்கமாயும் தெளிவாயும் விளக்கியுள்ளனர்.

முதுமையினுள் நுழையும் மனிதர்கள், ஒரு கட்டத்தில் ஒருவகையான வெறுமையை உணர்வதுண்டு. ஒரு காலத்தில் ஒருங்கே இருந்து கலகலப்பாக வாழ்ந்த பிள்ளைகள், தத்தமக்கென வேலை வாய்ப்புகளையும், வாழ்க்கைத் துணைகளையும் தேடி, பிரிந்து செல்லும் தறுவாய்களில், பெற்றோர் பலரும் தம் கடமைகளும் பொறுப்புகளும் தேவைகளும் தீர்ந்து விட்டன என்று கருதுவதுண்டு. அப்பொழுது குஞ்சுகள் கலைந்த குருவிக்கூட்டின் தன்மையை முதியோரின் வாழ்நிலை எய்திவிடுகிறது. இந்த வெறுங்கூட்டு மனநிலைதான் முதியோர் உளவியலின் மையமாகக் கருதத்தக்கது. இந்த மையத்தினைத் தொட்டுக்காட்டி, தன்மானத்துடன் இறுதிவரை உற்சாகத்துடன் செயற்படும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படின்,வயோதிபப்பருவம் சுமுகமாகக் கழியும் என்று இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. முதியோர்க்கு வழங்கத்தக்க உளவளத் துணையின் சாரத்தை இங்கு நாம் உள்வாங்கிக் கொள்கிறோம்.

அடுத்து வருவது, அறளை பெயர்தல் பற்றிய விளக்கமாகும். முதுமை உளவியலின் பிழிசாறான விடயங்கள் பல இங்கு துலக்கம் பெறுகின்றன. முதியோரைப் பற்றிக் கதைக்கும் பொழுது, 'அவருக்கு இன்னும் வாக்கு மாறவில்லை' என்றோ, 'ஆளுக்கு அறளை பெயர்ந்துவிட்டது' என்றோ குறிப்பிடுவதுண்டு. 'டிமென்ஷியா' என்பதற்கு ஈடாக 'அறளை' என்னும் பதம் இனங்காணப்பட்டு, இப்புத்தகத்திலே கையாளப்பட்டுள்ளமை மெச்சத்தக்கது. அறளையின் குணங்குறிகளும் அதனாற் பாதிப்படைந்தோரின் மனநிலையும் நுட்பமாய் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்த நோய்நிலைக்கு உட்பட்டவர்களைப் பராமரிக்கையில், சிகிச்சையளித்தல், புனர்வாழ்வு ஆகிய இரு கட்டங்கள் உள்ளமையும் தெளிவாக்கப்பட்டுள்ளது. நோய் உண்டென விளங்கி ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து சுறுசுறுப்பாய் இருக்க வழிசெய்து அன்பும் ஆதரவும் காட்டி, சூழலை மாற்றியமைப்பதன் மூலம் நிலைமையைச் சமாளிக்கும் உத்திகள் இக்கட்டுரையிற் பேசப்பட்டுள்ளன.

### சமூகமும் மரபும்

இதுவரை, உடல், உள மருத்துவத்துறை சார்ந்தோர் வரைந்துள்ள விடயங்களைக் கண்டோம். இவற்றிலிருந்து வேறுபட்டவையாகவும் இக் கட்டுரைகள் உள்ளன. ஒன்று சமூகவியல் நெறி சார்ந்து முதுமையை நோக்குவது; மற்றையது தமிழ் மரபுவழி நின்று முதுமை பற்றிச் சிந்திப்பது.

முதுமை பற்றிய கள ஆய்விலும் ஈடுபட்டுள்ள கலாநிதி நா. சண்முகலிங்கன் நடைமுறை விழிப்புடன் 'குடும்ப அமைப்பில் முதியவர்கள்' பற்றி எழுதியுள்ளார். முதுமைப் பருவம் இயல்பான குடும்பச் சூழலில் சமூகச் சூழலில், சுதந்திரமாய் விளங்கும்போதே அர்த்தமுள்ளதாகும் என அவர் விளக்குகிறார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி 'தமிழ் மரபில்முதுமை' பற்றி எழுதுகையில், பழஞ்செய்யுள்களையே முதன்மைப்படுத்தி எடுத்தாண்டுள்ளார். பழமொழிகளும், நாட்டார் கதையாடல்களும், கூத்திலக்கியங்களும் மேலும் சில பரிமாணங்களைக் காட்டியிருக்கக்கூடும். நம்மிடையே முதியோர் பிரச்சினை உண்டென்பதை ஒத்துக்கொண்டு, ஏற்ற வழிவகைகளைக் காண வேண்டும் என்பது பேராசிரியரின் எண்ணக்கிடக்கை ஆகும்.

இறுதியில் வருவது இறத்தல் பற்றித் தயா சோமசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை. அவர் உளநல மருத்துவர் என்ற அளவில் நில்லாது, சமூகசித்தம் பற்றிய விழிப்புடனும் மிகுந்த சிரத்தையுடனும் இதனை வரைந்துள்ளார். ''மரணம் வாழ்வின் முடிவல்ல; ஒரு கட்டம் .....இறப்பவர்சுய கௌரவத்துடனும் தேவையில்லாத வேதனைகளை அனுபவிக்காலும், சுலபமாகவும் போக விட்டுவிட வேண்டும்'' இது தயா அவர்களின் கூற்று. பண்பாட்டுப் பன்மைப்பாடு பற்றிய விழிப்பினை இக் கட்டுரையில் நாம் காண்கிறோம்.

### புதிய சரத்தியப்பாடுகள்

முதுமையின்போது ஒருவரின் இளமைக் காலத்து ஆற்றல்கள் பல குன்றிவிடுவது இயல்புதான். ஆனால், முன்பில்லாத சித்திகள் சிலவற்றை ஒருவருமே பெறுவதில்லை என்றும்அடித்துக்கூறி முடித்துவிட இயலாது. பலர் காணத்தவறும் இந்த உண்மையினைத் துலக்கிக் காட்டுவதாக, நம்மிடம் இப்போது படைத்து வழங்கப்பட்டுள்ள இந்தப் பயனுள்ள புத்தகம் அமைகிறது. முதுமையின் பின்னடைவுகளைச் சமாளிப்பது மட்டுமன்றி, புதிய சாத்தியப்பாடுகளை நோக்கி எவ்வாறு செல்லலாம் என்றும் அறிவின் வழி நின்று உணர்த்தும் இப்புத்தகம், நம் சமூகத்துக்குக் காலத்தினால் செய்த உதவி, அதனை வரவேற்றுப் பயன் கொள்வது நம் கடமையும் உரிமையும் ஆகும்.

**இ. முருகையன்**

## தகுதிகாண் ஆசிரிய நியமனம்

# சமுகமளிக்கத் தவறியோருக்கு மீண்டும் நேர்முகப்பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த 23, 24 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளாத 28 பேருக்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

மீள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

கந்தசாமி விக்னராஜன் (வரணி),
சோமசுந்தரம் செந்தில் ராஜ் (சாவகச்சேரி),
வைகுந்தராஜா ரஜனிகாந்த் (சாவகச்சேரி),
திருநாவுக்கரசு ஞானவேல் (கொடிகாமம்),
கார்த்திகேசு குணரத்தின ராஜா (கைதடி),
சின்னையா சிவசாந்தி (கொடிகாமம்),
சந்திரேசா ராஜமோகன் (கைதடி),
முருகேசு சுதர்சன் (கொடிகாமம்),
கணேஸ் வேணுகோபால் (எழுதுமட்டுவாள்),
அருணாசலம் அருள்றஞ்சினி (வரணி),
வேல்சாமி பாலன் லோஜிதா (மிருசுவில்),
முகுந்தா நடராஜா (சாவகச்சேரி),
றட்ணவரதர் தவரூபி (சாவகச்சேரி),
சின்னத்துரை றஞ்சனா [இயற்றாலை],
கந்தசாமி சத்திபநந்தன் [சாவகச்சே ],
ஜெகதீஸ்வரன் திபாகினி [சாவகச்சேரி],
கேமநந்தினி சதாசிவசர்மா [சாவகச்சேரி],
அந்தோனிப்பிள்ளை ஜோன் கொலின் [சாவகச்சேரி],
கணேசன் அபிராமி [மட்டுவில் வடக்கு],
சுப்பிரமணியம் கவிதா [மீசாலை],
சின்னத்துரை சுரேஸ்நாதன் [சாவகச்சேரி],
குலசேகரம் கனகேஸ்வரி [கொடிகாமம்],
சின்னத்தம்பி வேணுகா [சாவகச்சேரி],
செல்வரட்ணம் திருமகள் [சாவகச்சேரி],
சின்னராஜா சோபனா ]மிருசுவில்],
மகேந்திரன், பாமினி சாவகச்சேரி].
மார்க்கண்டு விமலாதேவி [கொடிகாமம்],
தியாகராஜா கவிதப [சாவகச்சேரி].

[ம-117]

உதயன்

## ஒரு குடையின் கீழ் போராடும் காலம்

"தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவதற்காக ஒரு கொடியின் கீழ் ஒன்று திரண்டு போராட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது".

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் ரெலோ அமைப்பின் முதல்வர் என். ஸ்ரீகாந்தா.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக இரண்டு பெரும் சிங்களக் கட்சிகளும் தமக்குள் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கும் நிலையில் அதையொட்டி இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார் ரெலோ ஸ்ரீகாந்தா.

தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக ஒரு கொடியின் கீழ் போராட வேண்டும்; அதற்கான காலம் எப்போதே வந்துவிட்டது என்பதுதான் ஈழத் தமிழர்களின் நீண்டகால நிலைப்பாடு.

ஆனால் காலத்துக்குக் காலம் நம் மத்தியில் தோன்றிய புல்லுருவிகள் இந்த ஒரு கொடியின் கீழ் போராடும் நல்லமைப்பை, தங்களின் சுயநலத்துக்காக உடைத்து, போராடும் சக்திகளைக் காட்டிக்கொடுத்து, நமது போராட்ட வீறைக் குறைத்துக்கொண்டிருந்ததுதான் சரித்திரம்.

இப்போது ஒரு சில அமைப்புகள் தவிர ஏனையவை, பதவி ஆசையை விட்டொழித்து, சுயநலத்தை ஒருபுறம் வைத்துவிட்டு, தமிழ்த் தேசியத்துக்காகப் போராடும் சக்தி எது என்பதை அடையாளம் கண்டு, அதற்கு உந்து சக்தியாகச் செயற்பட முன்வந்திருப்பதே தமிழர்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு போராடும் காலம் நெருங்கிவிட்டது என்று கூறும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழர் விடிவுக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் அமைப்பும் -

ஜனநாயக வழியில் அந்த இலக்கை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்படும் அமைப்புகளுக்கு - அந்த அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு - குந்தகம் இல்லாத நிலைப்பாட்டை எடுத்திருப்பதையும் அண்மைக்காலச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பெரும்பாலான தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும், ஈழத்தமிழரின் ஏக பிரதிநிதிகளாகப் புலிகள் ஏற்கப்படுவதை ஆட்சேபிக்காத நிலைப்பாட்டை ஏற்படுத்தியிருப்பதும், புலிகள் மீதான தடையை நீக்கிப் புலிகளுடன் நேரடிப் பேச்சை நடத்துமாறு அரசை வற்புறுத்துவதும் கூட நல்லதோர் இணக்க நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவியைத் தூக்கி எறியும்படி "சங்கிலியன் படை" என்ற அமைப்பின் பெயரில் - முக்கியமானதோர் அரசியல் நெருக்கடி நிலைமை நிலவும் இந்தக் காலத்தில் - அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரம், சில அநாமதேய பேர்வழிகளால் வெளியிடப்பட்டபோது அதற்குத் தகுந்த பதிலடியை புலிகள் விரைந்து கொடுத்திருப்பதும் இந்த இணக்க நிலையின் பின்னணியில் வைத்து நோக்கற்பாலது.

பதவியைத் தூக்கி எறியும்படி தமிழ் எம்.பிக்கள் அநாமதேயத் துண்டுப்பிரசுரம் மூலம் வற்புறுத்தப்பட்டதும் -

அந்தத் துண்டுப்பிரசுரத்தை மறுத்து புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்து வெளியிட்டதும் -

தமிழ் எம்.பிக்கள் பலரும் புலிகளினால் புடம்போட்டு மிளிரும் நிலையை எட்டியிருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

சரியோ, பிழையோ இந்தக் கால கட்டத்தில் தங்களது தற்போதைய பாதையை இந்த தமிழ் எம்.பிக்கள் உரிய வழியில் தொடர்வதையே புலிகள் விரும்புகின்றார்கள் என்பது அன்ரன் பாலசிங்கத்தின் கருத்தில் இருந்து உட்கிடையாகத் தெரிகின்றது.

இந்த நல்ல - ஆரோக்கியமான இணக்க நிலையைத் தொடர்ந்து தக்க வைத்து, ஒரு குடையின் கீழ் போராடும் சுமுக வாய்ப்பைப் பேணுவது தமிழ் எம்.பிக்கள் இனிமேல் நடந்து கொள்ளும் முறைகளில்தான் தங்கியுள்ளது.

இதை அவர்கள் புரிந்துகொள்வார்களா? இல்லை. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல கதைவிடுவார்களா?

# மன்னார் வல்லுறவுச் சம்பவம்; 14சந்தேகநபர்களுக்கும் பிணை

வவுனியா,ஓக.29

கடந்த மார்ச் மாதம் மன்னாரில் விடுதி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட படையினர் 14 பேரும் நேற்றுமுன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட இரு பெண்களும் அடையாள அணிவகுப்பின்போது, துல்லியமாக அடையாளம் காட்டியதையடுத்து கடற்படையினர் இருவர், நாசகாரத் தடுப்புப் பிரிவினர் இருவர் மற்றும் பத்துப் பொலீஸார் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் 14பேரும் தனித்தனியே தாக்கல்செய்த பிணை மனுக்கள் வவுனியா மேல்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பதில் நீதிவான் இராமச்சந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் ஒவ்வொருவரையும் இரண்டு ஆள்களின் சரீரப் பிணை உறுதியுடன் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

சந்தேகநபர்களின் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த வழக்கை தென்னிலங்கை நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றுவதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-4)

## புதிய கட்சி உதயம்

கொழும்பு,ஓக.29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து பிரிந்து ஐ.தே.க. ஆதரவுடன் தனிக் குழுவாக இயங்கி வந்தோர் 'இலங்கைத தொழிலாளர் ஐக்கிய முன்னணி' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஸ்தாபித்துள்ளனர்.

மாகாணசபை உறுப்பினர் சி.வி. சென்னன் அதன் தலைவராகவும் பி. தேவராஜ தவிசாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் அதன் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ)

## போலியோ மருந்து வந்து சேர்ந்தது

வடமராட்சி,ஓக.29

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு ஒரு தொகுதி போலியோ மருந்து வந்து சேர்ந்துள்ளது.

இவை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் நடத்தப்படும் கிளினிக்குகளில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும். (ம-173)

## நாட்டு நடப்பு

### பெரியது

பெரியது கேட்கின் பெருந்தகை ஐங்கர
பெரிது பெரிது பல்குழல் பெரிது
அதனிலும் பெரிது அதுதரும் ஓசை
ஓசையில் பெரிது அது தகர்த்திடும் கட்டடம்
அதனிலும் பெரிது ஆருயிர் பிரிதல்
அதனிலும் பெரிது அழுகுரல் ஓசை
அதனிலும் பெரிது அநாதைகள் கவலை
கவலையோ எனில் கடலிலும் பெரிது
கவலையைத் தாங்கும் அநாதையின் இதயம்
அலைகடல் அனைத்திலும் பெரிதிலும் பெரிதே!

- *விகடகவி.*

# அடுத்த ஆண்டு வடமராட்சிக்கு 1000 தொலைபேசி இணைப்புக்கள்

வடமராட்சி,ஓக.29

வடமராட்சிப் பிரதேசத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆயிரம் கேபிள் தொலைபேசி இணைப்புகளை வழங்க ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

அல்வாய் மாலிசந்தியில் உள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை மூலம் வடமராட்சிக்குத் தற்போது நூறு தொலைபேசி இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

இந்த இணைப்புகள் பருத்தித்துறை, நெல்லியடி, மந்திகை ஆகிய இடங்களில் பிரதான வீதியோடு உள்ள வாடிக்கையாளர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன.

கேபிள் தொலைபேசி இணைப்புக்கோரி வடமராட்சியிலிருந்து அதிகமானோர் விண்ணப்பித்தும் நூறு இணைப்புக்களுக்கு மேலாக தற்போதுள்ள பரிவர்த்தனை நிலையத்தின் மூலம் இணைப்புக்களை வழங்கமுடியாதநிலை இருந்து வருகிறது.

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்மினால் நுவரெலியாவில் பயன்படுத்தப்பட்ட ஆயிரம இணைப்புக்களைக் கொண்ட பரிவர்த்தனை இயந்திரம் விரைவில் இங்கு எடுத்துவரப்பட்டு, வடமராட்சி பரிவர்த்தனை நிலையத்தில் இணைக்கப்பட்டதும் வடமராட்சிப் பிரதேசத்தில் கேபிள் தொலைபேசி இணைப்புகள் அதிகரிக்கப்படும் என்றும் -

வடமராட்சி வாடிக்கையாளர்கள் அதன்பின் யாழ்.பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புகொள்ளாது நேரடியாகவே வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் -

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-173)

# பஸ்ஸால் மோதி பிரபாகரனை கொல்ல விரைந்தவர் கைது!

கொழும்பு,ஓக.29

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பஸ்ஸால் மோதிக் கொல்லும் எண்ணத்துடன், கொழும்பிலிருந்து வன்னி நோக்கி, அடுத்தவரின் பஸ்ஸை தைலாகக் கிளப்பிக்கொண்டு மிக வேகமாக விரைந்தவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த சனிக்கிழமை பொல்கஹவலையில் மூடப்பட்டிருந்த ரயில்வே கதவு ஒன்றை உடைத்தெறிந்தபடி வடக்கு நோக்கி பஸ்ஸொன்று தலை தெறிக்கும் வேகத்தில் விரைந்தது.

இதனைக் கண்ட பொலீஸார் அந்த பஸ்ஸை விரட்டிச்சென்று ரயர்களில் சுட்டு பஸ்ஸை நிறுத்தினர்; பஸ்ஸை ஓட்டிச் சென்றவரையும் பிடித்தனர்.

அப்போது அவர், "பிரபாகரன் மீது பஸ்ஸை ஏற்றிக்கொலவதற்காகச் சென்றுகொண்டிருந்த என்னை ஏன் தடுத்து நிறுத்தினீர்கள்?" என்று பொலீஸாரைப் பார்த்துச் சத்தமிட்டார்.

குழம்பிப்போன பொலீஸார் அவரைத் தீவிர விசாரணைக்குட்படுத்தினர்.

விசாரணையில் அந்த நபர் மனநிலை சரியில்லாதவர் என்பதும்-

கடவத்தைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் ஒருவரின் பஸ்ஸை திருட்டுத்தனமாகக் கடத்திச் செலுத்திவந்தார் என்றும்-

இந்த நபர் முன்னர் பயணிகள் பஸ்ஸில் சாரதியாகப் பணியாற்றியவர் என்பதும் - தெரியவந்தன.

பஸ்ஸால் மோதிப் பிரபாகரனைக் கொன்றுவிடலாம் என்று திட்டமிட்ட அந்த நபரை எண்ணி அழுவதா? சிரிப்பதா? எனத் தெரியவில்லை என்று விசாரணை நடத்திய அதிகாரிகள் கூறினர். (உ-ஒ)

# முன்பள்ளி ஆசிரியருக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.29

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் இன்று புதன்கிழமையன்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 867 பேருக்கு இந்த மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் -

எனவே முன்பள்ளி ஆசிரியர்களை இன்று காலை அமைச்சு அலுவலகத்துக்கு வரும்படியும் கேட்கப்பட்டுள்ளது.



வடலியடைப்புப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் புதரானை சித்தி விநாயகர் ஆலய கொடியேற்ற தினமான கடந்த 22ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் மின்கம்பம் ஒன்றை நடுவதற்கான செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ம)

## சிப்பாய்கள் தர்க்கம்

கொழும்பு,ஓக.29

களுத்துறைச் சிறைச்சாலையில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இரு சிப்பாய்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் எதிரொலியாக ஒரு சிப்பாய் மீது மற்றைய சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். எனினும் அவர் காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சிப்பாயை பொலீஸார் கைது செய்துள்ளனர். (உ-3-4)

## நாளை

ஆவணி 14
வியாழக்கிழமை
திதி: துவாதசி
முன்னிரவு : 8.38 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 3.22 வரை
சுபநேரம்: 7.35 - 9.05
ராகுகாலம் : 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

## சந்நிதிக்கு அடியார்கள் படையெடுப்பு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயிலில் நடைபெற்றுவரும் மஹோற்சவத்தில் தினமும் பெருமளவு பக்தர்கள் திரண்டு வழிபட்டுவருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையான துலாக் காவடிகள், பால்க்காவடிகள், கரகக் காவடிகள் பக்தர்களால் நேர்த்திக்காக எடுக்கப்பட்டுவருகின்றன. கோயில் வீதிகளில் அங்கப் பிரதிஷ்டையும், அடியழிப்பதும் நாளாந்தம் இடம்பெற்றுவருகின்றன.

தினமும் திரளும் பக்தர்களின் வசதிகருதி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, மானிப்பாய், நவாலி ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபட்டுவரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் அனைத்தும் சந்நிதி கோயில் ஊடாகவே தமது சேவையை நடத்துகின்றன.

கோயில் சுற்றாடலில் உள்ள அன்னதான மடங்களில் அன்னதானங்களும், தெய்வீகக் கலைநிகழ்ச்சிகளும் தினமும் இடம்பெறுகின்றன. (ம-173)

## உதயவாக்கு

அனுபவம் மெதுவாகத்தான் கற்பிக்கும். தவறுகள் அதற்குரிய செலவுகள்.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



## காரைநகருக்கு மின் வழங்குவதில் தாமதம்

காரைநகர்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய வேலைகளை மின்சார சபை மேற்கொண்ட போதிலும் மின்பிறப்பாக்கி பொருத்துவதற்கான பாதுகாப்பு அறை அமைக்கும் வேலைகள் இதுவரை பூர்த்தியடையாமையால் இப்பகுதிக்கு மின்வழங்குவது தாமதமாகி வருகிறது.

மின்பிறப்பாக்கி பொருத்துவதற்கான பாதுகாப்பு அறை அமைக்கும் வேலையை காரைநகர் பிரஜைகள் குழு பொறுப்பேற்றிருந்தது. இதுவரை அந்த வேலையைப் பூர்த்திசெய்யாமையால் மின்பிறப்பாக்கியை இங்கு கொண்டுவர முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-73)

# யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் தமிழ்த் தேசியத்தை வளர்க்க வேண்டும்

## கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் உரை

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகையாளர்கள் தமது பணியின் ஊடாக தமிழ்த்தேசியத்தை வளர்க்கவேண்டும்.

இவ்வாறு யாழ்மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சீ.வி.கே.சிவஞானம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

பத்திரிகையாளர்கள் வெறுமனே செய்திகளை எழுதுவதுடன் நின்றுவிடாமல் தமது செய்திச் சேவையின் ஊடாகத் தமிழ்த்தேசியத்தை வளர்த்து முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்த பத்திரிகையாளர்களுள் வீரகேசரி செல்லத்துரை தமிழ்த் தேசியத்தை வளர்ப்பதில் முனைப்பாகச் செயற்பட்டு, தனது செய்திச் சேவையினூடாக தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுத்தார் - என்றார். (ம-173)

## கும்பாபிஷேகம்

காரைநகர் தங்கோடை அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (ம-73)

## குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு

காரைநகர்,ஒக.29

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்திற்காக இந்த ஆண்டு பரமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீட்டின் விவரம் வருமாறு:-

✪ மெலிஞ்சிமுனை குடிதண்ணீர் விநியோகத்திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் -

✪ தம்பாட்டி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் -

✪ எழுவைதீவு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-73)

## ஆலயத்தில் பொருள்கள் திருட்டு

ஆனைக்கோட்டை உயரப்புலம் பழைய வளவு பிள்ளையார் ஆலயத்தின் வசந்த மண்டப கூரை ஓடுகளும், ஆலயத்தில் புனரமைப்பு வேலைகளுக்காக வைக்கப்பட்டிருந்த சீமெந்துக் கற்களும் திருடப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. இத்திருட்டுப் பற்றி ஆலய தர்மகர்த்தா மானிப்பாய பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். ஆனைக்கோட்டையிலுள்ள இராணுவ முகாமிலும் இத்திருட்டுப் பற்றி முறையிடப்பட்டுள்ளது. (ம-135)

## பிப்பிலி மயானம் துப்புரவு செய்யப்பட்டது

மானிப்பாய் - பிப்பிலி மயானம் அண்மையில் வலி.தென்மேற்கு பிரதேச சபை அபிவிருத்தித் தொண்டர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மானிப்பாய் பிரதேச சபை சுகாதார மேற்பார்வையாளர் அப்பாத்துரை யோகநாதன் தலைமையில் அபிவிருத்தி தொண்டர்கள் மயான துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர்.

மூன்று நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற பணியில் 100அபிவிருத்தித் தொண்டர்கள் கலந்துகொண்டதாக சுகாதார மேற்பார்வையாளர் அ.யோகநாதன் தெரிவித்தார்.(ம-185)

## பட்ட மேற்படிப்பு கற்கை நெறிக்கு விண்ணப்பம்

வலி.தென்மேற்கு,ஒக.29

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம பட்டமேற்படிப்பு கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

சமூகவியல், மானிடவியல், புவியியல் ஆகிய பாடங்களில் முதுதத்துவமாணி (M.Phill), கலாநிதி (Ph.D) ஆகிய கற்கை நெறிகளில் முழுநேர ஆங்கில மொழியிலான கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் உதவிப் பதிவாளர் (பரீட்சைகள்), கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆகும்.(ம-185)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



மீசாலை கிழக்கைச் சேர்ந்த

வசந்தகுமார் - புனிதம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வி

### செல்வி மதுஷாலினி

இன்று (29.08.2001) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். மதுஷாலினியை அன்பு அப்பா, அம்மா, அண்ணன்மார்களான கோபிஅண்ணா, லவன்அண்ணா, சுகன்அண்ணா மற்றும் அப்பம்மா, அம்மம்மா, ஐயா, ரஜனிஅன்ரா மற்றும் மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

திரு.க.வசந்தகுமார் (அப்பா)

நிரந்தர முகவரி: "புனித மஹால்", மீசாலை கிழக்கு.

(91391)

தற்காலிக முகவரி: இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

---

உ

சிவமயம்

வட்டுக்கோட்டை - உலக்கைப்பளச்சி பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமி திருக்கோயில்

### திருக் குடமுழுக்குவிழா

எண்ணெய்க் காப்பு:- இன்று (29-08-2001) புதன்கிழமை காலை 8மணிமுதல் மாலை 4மணிவரை

கும்பாபிஷேகம் :- நாளை (30-08-2001) வியாழக்கிழமை காலை 8.15மணி முதல் 9.15மணிவரை

(91630)

- *ஆலய பரிபாலன சபை.*

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் சின்னக்குட்டி கந்தையா

கரம்பைக்குறிச்சி, வரணியைச் சேர்ந்தவரும் கரம்பைக்குறிச்சிப் பிரிவின் கிராம அலுவலருமான திருமதி இரஞ்சினிதேவி மனோகரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னக்குட்டி கந்தையா

அவர்கள் கடந்த 30-07-2001 திங்கட்கிழமையன்று அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாருக்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள்,
தென்மராட்சி - சாவகச்சேரி.

(C/18032)

---

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
சபாபதி திருநாவுக்கரசு
(திருஅண்ணை)
*(உபதலைவர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்)*

திருஅண்ணையின் திடீர் மறைவையொட்டி நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அவரை இழந்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் மன்றம், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி.**

(91654)

---

அதிகளவில் விற்பனையாகும்
நிப்பொன் (NIPPON)
தன்னியக்க Rice Cooker
Non Stick
கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்
அதிநவீன உத்தரவாத தர் வோண்ட



5% விலைக் கழிவு
★ சக்தி சேமிப்புடன் அதிக விரைவான சமையல்
★ வெப்பநிலை பேணக் கூடியது
★ 9க்கு மேற்பட்ட வடிவங்கள்
★ மலர் வடிவங்களும், கவர்ச்சிகரமான
★ வண்ணங்களை கொண்டது
★ With / Without Steamer
கண்ணாடி / Stainless மூடி
ஒரு வருட உத்தரவாதம்
NEW
LANKA NIPPON
No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.
AVAILABLE ISLAND WIDE
நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்

---

### அன்பான வேண்டுகோள்!

அடியார்களே!

இன்றைய காலகட்டத்தில் நாட்டில் நிகழ்ந்த அசாதாரண அனர்த்த சூழ்நிலையால் எமது ஆலயம் பலத்த சேதமடைந்துள்ளது. அதனைத் திருத்தியமைத்து நித்திய பூஜைகள் செய்வதற்கு முருகப்பெருமான் திருவருள் சித்தமாகியுள்ளது. ஆகவே ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அடியார்கள், அன்பர்கள் தங்களால் இயன்ற சரீர உதவி, பொருள் உதவிகள் புரிந்து உடன் நித்திய பூஜையை ஆரம்பிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியும், ஆலோசனைகள் கூறியும் நமது சைவத்தையும் தமிழையும் வளர்க்க தங்களாலியன்ற பணியை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு.வே.துரைசாமி, உபதபாற்கந்தோர் ஒழுங்கை, *(ஈசன் கல்வி நிலைய ஒழுங்கை) கோண்டாவில் மேற்கு.*

தர்ம பரிபாலனசபை, தென்மட்டுவில் வேரற்கேணி, ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்.

(91640)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 05 - 04 - 1932



மறைவு 30 - 07 - 2001

### திருமதி வேலன் சின்னப்பிள்ளை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே!
காலத்தால் நாமுமைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் தொடரும் நின் நினைவலைகள்!

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் பத்திரிகை வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று(29-08-2001) புதன்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

திரு.திருமதி இராசதுரை சிவயோகராணி, சதீஸ்வரன்.

*சிமிழ் அம்மன் கோயிலடி, வரணி வடக்கு, வரணி.*

(91644)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 - 08 - 1931



மறைவு 30 - 07 - 2001

அமரர்
### நாராயணபிள்ளை ஆறுமுகம்
*(ஓய்வுபெற்ற பரிசோதகர், மதுவரித்திணைக்களம்)*

**எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற அப்பாவே!
நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை
இன்றோடு இதயத்தில் இருத்தி விட்டு
இருளில் தத்தளிக்கின்றோம்.
உங்கள் நினைவுகள் எங்கள்
மனங்களில் என்றும் நின்று நிழலாடும்.**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மனைவி, மகள்.**

*ஆஸ்பத்திரி வீதி, மூளாய்.*

(91468)

# அமெரிக்காவில் ஈழத்தமிழருக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்



யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்தவரும் அமெரிக்காவின் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் வசிப்பவருமான சண்முகரத்தினம் சிவகுமார் (வயது 33) மற்றும் திருமதி விஜயபாரதி சிவகுமார் (வயது 28) தம்பதிகளுக்கு முதல் பிரசவத்திலேயே நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன. அவற்றில் மூன்று பெண்கள் மற்றையது ஆண்.

கடந்த பத்து வருடங்களாக அமெரிக்காவில் வசிக்கும சிவகுமார் கம்பியூட்டர் இணைய வலைப்பின்னல் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு நிபுணர்.

தற்போது ஆறு மாதங்களாகும் கிருஷானி, சிவானி, குரு, நிவேதினி ஆகிய இந்த நான்கு குழந்தைகளும் இப்போது ஆரோக்கியமுள்ளவர்களாக உள்ளனர்.

ஆனால் ஒரேயொரு பிரச்சினை. நான்கு குழந்கைளையும் ஒன்றாகக் கவனிக்க வேண்டியிருப்பதால் தாய், தந்தை இருவருமே வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்து குழந்தையைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

ஒருசில மாதங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட நான்கு குழந்தைகளினதும் படங்களை அருகில் காண்கின்றீர்கள்.



# புலிகளுக்கே செஞ்சிலுவை சர்வதேசக் குழு உதவுவதாகச் சிங்களவர்கள் குற்றச்சாட்டு

## அந்த அமைப்பின் பேச்சாளர் ஹர்ஷா கூறுகிறார்

கொழும்பு,ஓக.29

செஞ்சிலுவை சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுக்கே உதவி வருவதாக சிங்கள மக்கள் குற்றம் சுமத்துகின்றனர் என்று அந்த அமைப்பின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் செஞ்சிலுவைக் குழு நடத்திய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வடக்கு - கிழக்கில் மாத்திரம் தற்போது கடமையாற்றுவதாலேயே சிங்கள மக்கள் இக்குற்றச்சாட்டை சுமத்துவதாகவும், 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமது அமைப்பு தெற்கில் மாத்திரமே பணியாற்றியது என்பதை சிங்கள மக்கள் மறந்துவிட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் எமது அமைப்பு போரிடும் இரு தரப்புக்கள் மத்தியிலும் 436 சடலங்களை பரிமாறியுள்ளதாகவும், 1600 நோயாளர்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அழைத்து வந்துள்ளதாகவும், தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கிடைத்த 979 விண்ணப்பங்களைக் கொண்டு 273 பேரை கண்டுபிடித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இணைப்பாளர் ஹோபாரஸ் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையின் போர்க்காலச் சூழலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைச் சந்திப்பதை விட அதிகளவில் இறந்தவர்களின் சடலங்களையே தாம் சந்திக்க நேர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டார். (க-9)

## நஞ்சு கலந்த உணவால் 16 பொலீஸார் பாதிப்பு

கொழும்பு,ஓக.29

மன்னார் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபன கட்டடத்தில் இயங்கிய பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய 16 பொலீஸார் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டு மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை காலை இவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் நஞ்சு கலந்திருந்ததாலேயே அவர்கள் பாதிக்கப்பட்டதாகவும் -

உணவு நஞ்சாகியதற்கான காரணத்தை அறிய விசாரணை நடப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## வாசகர் திருமுகம்

### யாழ்.மக்கள் புத்திசாலிகள்!

உதயனின், வாசகர் திருமுகம் பகுதியில் 19-08-2001 அன்று நக்கீரன் எழுதியது போன்று யாழ்.மக்கள் குழையடிப்பும், செய்யவில்லை, 22-08-2001 அன்று றூபன் எழுதியிருந்தது போன்று அவர்கள் பாராட்டும் செய்யவில்லை. உண்மையாதெனில் -

தமிழினத்தின் விடுதலைக்காக வசதிகள், சலுகைகள் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு உரிமைக்காக ஆயுதம் ஏந்திப்போராடப் புறப்பட்டவர்கள்தான் இம்மக்கள். இவர்களில் சிலர் அவ்வப்போது சில சில தளம்பல்களுக்கு உட்பட்டது என்னமோ உண்மைதான். ஆனால் அநேகமானோர் இன்றுவரை இந்த ஆயுதப் போராட்டம் ஊடாகவே எமக்கு விடிவு, சமாதானம் கிடைக்கும் என உறுதியாக நம்புகிறார்கள்.

எனவே இவர்களின் மனஉறுதியைச் சிதைக்க சலுகைகளையும், வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்கலாம் எனத்தவறாக எண்ணி சிலர் செயற்படுகின்றனர். மக்களின் வரிப்பணத்தில் இருந்து கொடுக்கப்படும் இச்சலுகை, வசதிகளை சிலர் பெற்றுக்கொண்டாலும்கூட அவர்களின் அரசியல் சித்தாந்தங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

எனவே இவர்களிடம் கைநீட்டிப் பெற்ற உதவிகளுக்கு கைம்மாறாக பத்திரிகையில் நன்றியைப் பிரசுரித்து தமது நன்றிக்கடன்களை நிறைவு செய்துகொள்கின்றனர் என்பதே உண்மை.

இத்தனை இழப்புக்கள், தியாகங்களின் பின்பும் சலுகைகளுக்கு விலைபோகுபவர்கள் அல்லர் யாழ்.மக்கள். அவர்கள் புத்திசாலிகள்.

*கொழும்புத்துறை.* கு.மனோ

### பதிவுக் கட்டணம் என்ற பெயரில் பணம் கறக்கும் நடவடிக்கை ஏன்?

இன்றைய உலகம் கணனி மயமானது. எல்லாத்துறைகளிலும் கணனி பிரதானமானதாகிறது. இதனால் இன்று எல்லோரும் கணனிக் கல்வி கற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் பல தனியார் நிறுவனங்கள் கணனிப்பயிற்சி வழங்குகின்றன. அவை தங்களுக்கிடையே போட்டி போட்டுக்கொண்டு விளம்பரம் செய்வதில் மட்டும் குறைவில்லை. ஏதோ தாம் இலவசமாகக் கற்பிப்பது போல் விளம்பரம் செய்கிறார்கள்.

இந்த நிறுவனங்கள் புலமைப்பரிசில் என்ற சொல்லின் அர்த்தத்தையே மறந்துவிடுகின்றன. ஒரு நிறுவனம் 100 ரூபா பரீட்சைக் கட்டணத்துடன் புலமைப்பரிசில் வைத்தால் மற்றைய நிறுவனம் அதனைவிடக் குறைந்த செலவிலோ இலவசமாகவோ பரீட்சை நடத்துகின்றது.

பரீட்சையில் எப்படி எழுதினாலும் அதிகமானோர் 50 வீதத்துக்கு மேல் சித்தி என்று கூறுவார்கள். பின்பு பதிவுக்கட்டணம் என்று சில ஆயிரம் ரூபாவை அறவிடுவார்கள்.

இது ஏன் இப்படி? பதிவுக்கட்டணம் என்பது உறுதிப்படுத்தப் பெற்றுக் கொள்ளும் பணமே. ஆனால் இந்த நிறுவனங்கள் பதிவுக்கட்டணம் என்னும் பேரில் அநியாயம் பணம் பிடுங்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவர்களைக் கேட்பதற்கு, அரசு, அரச அதிகாரிகள் தமிழ்க்கட்சிகள் எவரும் இல்லையா?

பாதிக்கப்பட்ட மாணவன்.

### கப்பல் கட்டணம் செலுத்தினால் நிவாரணத்தை நிறுத்துவது நியாயமா?

27-08-2001 உதயன் பத்திரிகையில், யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் கூடி முடிவெடுக்கப்பட்டதாக "குடாநாட்டில் குடியமர்வதற்காக பணம் செலுத்திக் கப்பலில் வருவோருக்கு நிவாரணமில்லை - செயலக கூட்டத்தில முடிவு" எனும் தலைப்பில் வெளியான பத்திரிகைச் செய்தியை வாசித்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளேன்.

1983ஆம் ஆண்டில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயரும் நிகழ்வுகள் தமிழர்களாகிய எங்களுக்கு நிரந்தரமாகி விட்டன.

இந்நிலையில் 09-07-95இற்குப் பின்னர் 'லீப் போர்வேட்' இராணுவ நடவடிக்கையின் போதும், தொடர்ந்தும் யாழ்.குடாநாட்டு மக்கள் தென்மராட்சிக்கும் பின்னர் அங்கிருந்து வன்னி, வவுனியா, திருகோணமலை, கொழும்பு என்றெல்லாம் இடம்பெயர்ந்து சென்று, இருக்க இடமில்லாமல் உறவினர் துணையில்லாமல், ஒரு வேளைக்குக்கூட உணவில்லாமல், குழந்தைகள் கல்வியை இழந்து, வீடு வாசல் சுற்றத்தையிழந்து பெரும் அல்லல்பட்டுள்ளனர். அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப உயிரைக் கையில் பிடித்தவாறு கவலையுடன், உரப்பைகளுக்குள் எஞ்சிய உடுபுடைவைகளுடன் யாழ் திரும்பும் காட்சி எல்லோர் மனதையும் வாட்டி வதைக்கிறது.

மேலும் வெளிமாவட்டங்களில் சொல்லொணாத் துயரங்களின் மத்தியில் வாழ்ந்த அவர்கள் கப்பல் பயணத்திற்குக்கூட பணமில்லாமல் தெரிந்தவர், சொந்தங்கள் என்பவர்களிடம் கடனுக்கு பணம் வாங்கி கப்பலில் யாழ்.வந்து சேர்கின்றனர்.

இந்த நிலையில் அரசாங்கக் கதிரைகளில் ஏறியிருக்கும் அதிகாரிகள் கூடி மேற்படி தீர்மானத்தை எடுத்திருக்கிறார்கள்.

இந்த நிலை அவர்களுக்கு ஏற்பட்டால்தான் அவர்களுக்கு அதன் மெய்நிலை புரியும்.

மேலும் பயணிகள் கப்பல்மூலம் பிரயாணம் செய்வதற்கு இலவச அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு எவ்வளவு காலம், எவ்வளவு சிரமம் என்பவற்றையும் அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

இந்த நிலையில் கட்டணம் செலுத்தி வருவோர்களுக்கு நிவாரணமில்லை எனக் கூடி முடிவெடுத்தவர்கள் ஒரு கணம் சிந்தித்தால் அதுவே போதுமானது.

*மானிப்பாய்.* - ரமேஷ்

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 20ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதி யாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(188827ஏ) (189773ஏ) (197694ஏ)
(200026ஏ) (200026பி) (200210ஏ)
(200246ஏ) (200246பி) (200246சி)
(200246டி) (202251ஏ) (202364ஏ)
(202364பி) (202364சி) (202364டி)
(202364ஈ) (202364எவ்) (202425ஏ)
(204802ஏ) (204802பி) (204836ஏ)
(204925ஏ) (204925பி) (204929ஏ)
(204934ஏ) (204934பி) (204964ஏ)
(204964பி) (204964சி) (204999ஏ)
(205009ஏ) (205032ஏ) (205050ஏ)
(205050பி) (205050சி) (205131ஏ)
(205131பி) (205131சி) (205131டி)
(205131ஈ) (205156ஏ) (205156பி)
(206257ஏ) (206257பி) (206265ஏ)
(206266ஏ) (206281ஏ) (206296ஏ)
(206298ஏ) (206304ஏ) (206311ஏ)
(206311பி) (206315ஏ) (206333ஏ)
(206333பி) (206333சி) (206333டி)
(206333ஈ) (206335ஏ) (206335பி)
(206335சி) (206363ஏ) (206372ஏ)
(206372பி) (206375ஏ) (206383ஏ)
(206390ஏ) (206390பி) (206390சி)
(206394ஏ) (206394பி) (206394சி)
(206402ஏ) (206404ஏ) (206408ஏ)
(206408பி) (206408சி) (206408டி)
(206408ஈ) (206439ஏ) (206446ஏ)
(206446பி) (206454ஏ) (206470ஏ)
(206470பி) (206470சி) (206474ஏ)
(206484ஏ) (206484பி) (206508ஏ)
(206508பி) (206510ஏ) (206510பி)
(206528ஏ) (206544ஏ) (206547ஏ)
(206577ஏ) (206579ஏ) (207203ஏ)
(207208ஏ) (207208பி) (207209ஏ)
(207705ஏ) (206411ஏ)

### கோப்பாய்

(195244ஏ) (195244பி) (195244சி)
(195244டி) (195244ஈ) (206449ஏ)
(206449பி) (206463ஏ) (206486ஏ)
(207526ஏ) (207549ஏ) (207563ஏ)
(207570ஏ) (207647ஏ)

### நல்லூர்

(189199ஏ) (202380ஏ) (202380பி)
(202380சி) (202380டி) (202380ஈ)
(202395ஏ) (202395பி) (202739ஏ)
(202739பி) (202743ஏ) (202743பி)
(204823ஏ) (204823பி) (204844ஏ)
(204856ஏ) (204856பி) (204856சி)
(204878ஏ) (204878பி) (204995ஏ)
(205001ஏ) (205001பி) (205001சி)
(205234ஏ) (205234பி) (205234சி)
(205234டி) (206253ஏ) (206314ஏ)
(206314பி) (206314சி) (206314டி)
(206314ஈ) (206314எவ்) (206320ஏ)
(206320பி) (206343ஏ) (206357ஏ)
(206362ஏ) (206368ஏ) (206368பி)
(206401ஏ) (206419ஏ) (206421ஏ)
(206421பி) (206421சி) (206421டி)
(206435ஏ) (206435பி) (206441ஏ)
(206441பி) (206441சி) (206448ஏ)
(206469ஏ) (206469பி) (206530ஏ)
(206530பி) (206545ஏ) (206553ஏ)
(206578ஏ) (207202ஏ) (206337ஏ)
(206337பி) (206337சி) (206425ஏ)
(206606ஏ) (206606பி)

இம்மாதம் 21ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் :-

### சாவகச்சேரி

(201329ஏ) (201329பி) (201329சி)

### யாழ்ப்பாணம்

(199698ஏ) (199699ஏ) (191232ஏ)
(191232பி) (200020ஏ) (200020பி)
(204872ஏ) (204890ஏ) (204890பி)
(204890சி) (204927ஏ) (205161ஏ)
(205161பி) (205261ஏ) (205261பி)
(205261சி) (205261டி) (206229ஏ)
(206229பி) (206229சி) (206229டி)
(206254ஏ) (206310ஏ) (206331ஏ)
(206331பி) (206331சி) (206344ஏ)
(206354ஏ) (206392ஏ) (206392பி)
(206392சி) (206412ஏ) (206444ஏ)
(206444பி) (206510ஏ) (206510பி)
(206510சி) (206572ஏ) (206572பி)
(206572சி) (206572டி) (206572ஈ)
(206572எவ்) (206572ஜி) (206572எச்)
(206572ஐ) (206573ஏ) (206573பி)
(206573சி) (206573டி) (206573ஈ)
(206573எவ்) (206576ஏ) (206611ஏ)
(206612ஏ) (206630ஏ) (207210ஏ)
(207210பி) (208384ஏ)

### கரவெட்டி

(188096ஏ)

### கோப்பாய்

(136401ஏ) (136401பி) (187784ஏ)
(199002ஏ) (199002பி) (199002சி)
(199011ஏ) (199034ஏ) (199057ஏ)
(199057பி) (199058ஏ) (199059ஏ)
(199081ஏ) (199154ஏ) (199154பி)
(199199ஏ) (199199பி) (201398ஏ)
(201398பி) (201398சி) (203252ஏ)
(203252பி) (204521ஏ) (204521பி)
(204572ஏ) (204596ஏ) (204596பி)
(204596சி) (204596டி) (204707ஏ)
(204769ஏ) (204772ஏ) (204773ஏ)
(207485ஏ) (207492ஏ) (207495ஏ)
(207495பி)

### நல்லூர்

(187535ஏ) (187536ஏ) (187537ஏ)
(187538ஏ) (187540ஏ) (187672ஏ)
(187673ஏ) (187690ஏ) (187693ஏ)
(187699ஏ) (187767ஏ) (187771ஏ)
(187775ஏ) (187779ஏ) (187783ஏ)
(187785ஏ) (187786ஏ) (187818ஏ)
(187835ஏ) (187846ஏ) (187852ஏ)
(187888ஏ) (188056ஏ) (188057ஏ)
(188086ஏ) (199690ஏ) (199713ஏ)
(199714ஏ) (199784ஏ) (200467ஏ)
(200483ஏ) (200484ஏ) (200522ஏ)
(200547ஏ) (200553ஏ) (200560ஏ)
(201269ஏ) (201269பி) (201396ஏ)
(201396பி) (204529ஏ) (204529பி)
(204615ஏ) (204767ஏ) (204767பி)
(206230ஏ) (206610ஏ) (206627ஏ)
(206628ஏ) (206629ஏ) (206682ஏ)
(206682பி) (207217ஏ) (207217பி)
(207217சி)

### சண்டிலிப்பாய்

(170878ஏ) (200572ஏ)

### தெல்லிப்பழை

(199178ஏ)

### உடுவில்

(170892ஏ) (170893ஏ) (170894ஏ)
(170895ஏ) (170896ஏ) (187681ஏ)
(188080ஏ) (199722ஏ) (199723ஏ)
(199724ஏ) (199725ஏ) (199726ஏ)
(199727ஏ) (199728ஏ) (199729ஏ)
(199730ஏ) (199731ஏ) (199732ஏ)
(199733ஏ) (199735ஏ) (199736ஏ)
(199737ஏ) (199738ஏ) (199739ஏ)
(199748ஏ) (200501ஏ) (201374ஏ)
(204628ஏ) (204714ஏ) (204714பி)

### வேலணை

(199712ஏ)

(க-10)

# ஆசிரியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்.கல்வி வலய ஆசிரியர்களின் முரண்பாட்டுக் கல்விச் செயற்பாட்டுக்கான கொடுப்பனவுகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் நேரில் வருகை தந்து தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ம-10-51)

# திருமண வாழ்த்து

மங்களகரமான விஷு வருடம் ஆவணி மாதம் இன்று (29.08.2001) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொழும்பு –13, புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா தேவாலயத்தில் நடைபெறும் திருமணத்தில் இணையும்

## யூட்வோல்ட்டன் மஞ்சுளா

புதுமணத் தம்பதிகளை பல்லாண்டு காலம் பல்கலையும், நீண்ட ஆயுளும், குறைவற்ற செல்வமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்தும் உள்ளங்கள்.

*நாரந்தனை மேற்கு,*
*ஊர்காவற்றுறை.*

(91695)

கி.நி.சகாயநாதன்
குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி மின்சார சபையில் சிரேஷ்ட அலுவலராகக் கடமையாற்றி 10.08.2001அன்று ஓய்வு பெற்றவரான

**உயர்திரு. மா.சுப்பையா**

அவர்கள் சாவகச்சேரி மக்களுக்குச் செய்த சேவைகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி.

**நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்,**
213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(91694)

# போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

(i) எழுதுவினைஞர்: பொதுவிவேகம், மொழி அறிவு
(ii) கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்குரியது: பொது விவேகம், பொது அறிவு

*ஆரம்பம்:* 01-09-2001 சனி நேரம் 1 மணி
*ஆசிரியர்:* அ.குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம், யாழ்ப்பாணம். (91689)

# ஆலயத்துக்கு கோபுரமணி தேவை

**மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு,** 100 கிலோ எடைக்கு மேற்பட்ட தராதரமான கோபுரமணி தேவை. ஏற்கனவே பாவனையில் இருந்த மணியும் ஏற்றுக்கொள்ளப்படும். விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

பரிபாலகர்,
**புனித அந்தோனியார் ஆலயம், மானிப்பாய்.**

(91683)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சபாபதி திருநாவுக்கரசு

*(கட்டட ஒப்பந்தகாரரும் 'ரவல் பில்டேஸ்' உரிமையாளரும்)*

அன்னாரின் மறைவுத் துயரில் நாமும் பங்குகொண்டு அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*13,14, பெரிய கடை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(91685)

பிரிவால் துயருறும்:
ஜீ.எஸ்.லிங்கநாதன்
அன்கோ நிறுவனத்தினர்.

# வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற

# புதிய அலுவலகத் திறப்பு விழா அழைப்பு



| | |
|---|---|
| *காலம்:* | நாளை (2001.08.30) வியாழக்கிழமை |
| *நேரம்:* | மு.ப.8.30 - 9.15 மணிவரையுள்ள சுபவேளையில் |
| *இடம்:* | **வல்வெட்டித்துறை நவீன சந்தை மேல்மாடி.** |
| *தலைமை:* | **திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்** (J.P.U.M.)<br>*தலைவர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.* |
| *பிரதம விருந்தினர்:* | **உயர்திரு.க.சண்முகநாதன்** *அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.* |
| *கௌரவ விருந்தினர்:* | **திரு.ரி.வி.கிருஷ்ணசாமி**<br>*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.*<br>**திரு.ஆ.சிவசுவாமி** *பிரதேச செயலர், பருத்தித்துறை.*<br>**திரு.இ.சிறீகாந்தா**<br>*பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாண மாவட்டம்.* |
| *சிறப்பு விருந்தினர்:* | **வைத்திய கலாநிதி.க.மயிலேறும்பெருமாள்**<br>*மாவட்ட வைத்திய அதிகாரி, வல்வெட்டித்துறை.*<br>**திரு.ந.மகேந்திரன்**<br>*உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், பருத்தித்துறை.*<br>**திரு.பெ.கனகசபாபதி**<br>*ஓய்வுபெற்ற செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.*<br>**திரு.எஸ்.சுந்தரகுமார்**<br>*நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடத்திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாண மாவட்டம்.*<br>**திரு.எஸ்.சிவசுப்பிரமணியம்**<br>*பிராந்திய பொறியியலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.* |

**1987ஆம் ஆண்டு விமானக் குண்டுவீச்சினால் முற்றாகச் சேதமாக்கப்பட்ட நவீன சந்தை மாடிக்கட்டடத்தின் ஒரு பகுதி சுமார் 35 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நகராட்சிமன்ற அலுவலகமாகத் திறந்துவைக்கப்படுகின்றது.**

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

இறைவணக்கம்

பெயர்ப் பலகை திரை நீக்கம்:
**திரு.சு.சந்திரசேகரம்** *(உப தலைவர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை)*

அலுவலகம் திறந்து வைத்தல்:
**திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்** (J.P.U.M.)
*(தலைவர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை)*

வரவேற்புரை:
**திரு.செ.திருஞானசம்பந்தர்** *(செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை)*

வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற முன்னாள் தலைவர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம

**அமரர் து.நவரெத்தினம்** அவர்களின் உருவப்படம்
*இளைப்பாறிய அதிபர்* **திரு.ச.சத்தியமூர்த்தி** அவர்களால்
திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

**அமரர் ச.ஞானமூர்த்தி** அவர்களின் உருவப்படம்
*வல்வெட்டித்துறை முத்துமாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவர்*
**திரு.வ.இ.நடனசிகாமணி** அவர்களால்
திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

ஆசியுரை: **சுவாமி சித்ரூபானந்தா** *(ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)*
**அருட்திரு.க.அருள்நேசன்** *(பங்குத் தந்தை - புனித செபஸ்தியார் தேவாலயம், வல்வெட்டித்துறை)*

தலைமையுரை

சிறப்பு விருந்தினர்கள் உரை

கௌரவ விருந்தினர்கள் உரை

பிரதம விருந்தினர் உரை

நன்றியுரை:
**திரு.வே.சிவராசலிங்கம்** *(பிரதம எழுதுநர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நகராட்சிமன்றம்,*
*வல்வெட்டித்துறை.*

(C/18038)

***தலைவர், உபதலைவர்,***
***செயலாளர், உறுப்பினர்கள்,***
***உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.***

# 2 பெண்கள் உட்பட 11 பேருக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 29

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு பெண் கைதிகள் உட்பட 11 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட வேலாயுதன் சிவராஜா, கார்த்திகேசு அசிந்தன், சிதம்பரன் அருணன், மருதப்பிள்ளை றேமன், செல்வராஜா சதீஸ், பாண்டியன் செல்வராஜா, சேதுபதி சதீஸ்குமார், நவரட்ணராஜா நிமல், செ. செல்வரஞ்சன் ஆகிய 9 ஆண் கைதிகளையும் — தணிகாசலம் தவச்செல்வி, சேதுபதி பாக்கியலட்சுமி ஆகிய இருபெண் கைதிகளையும்—

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை— எதிர்வரும் 11 ஆம் திகதி வரை — விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(க-6)

# ஆலயத்தின் எட்டுத் திக்குகளிலும் பன்னிரு திருமுறை முற்றோதல்

## உடுவிலில் சனியன்று நடக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 29

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுகவிநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை எட்டுத் திக்குகளிலும் இருந்து பன்னிரு திருமுறை முற்றோதும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்தத் திருமுறை முற்றோதலில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஓதுவார்கள், பண்ணிசை ஆர்வலர்கள் பங்குபற்றுவர்.

திருமுறை ஓதுவோர் எட்டுத் திக்குகளிலும் அமர்ந்திருந்து திருமுறை முற்றோதலை நிகழ்த்துவர்.

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுகவிநாயகர் ஆலயத்தினரும், அகில இலங்கைத் திருமறை மன்றத்தினரும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

(க-7)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை திருச்செல்வம் (சந்திரன்)

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திருச்செல்வம் 27/08/2001 திங்கட்கிழமை லண்டனில் (U.K.) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சின்னம்மா (U.K.) ஆகியோரின் அன்பு மகனும், சதீஸ்வரியின் (விசுவமடு) அன்புக் கணவரும், தனஞ்செயன் (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), கலைமகள் (A/L 2001 மாணவி, விஸ்வமடு), ஆயவன் (கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி), பாதவன், கேசவன் (விசுவமடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி (Colombo), புஸ்பராணி (Germany), பராசக்தி (U.S.A), திருக்குமார் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், இணுவில்), மல்லிகாதேவி (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர், ஏழாலை), ஸ்ரீ மாலதி (U.K), ஜெயந்தி (Germany), சாவினி (விஸ்வமடு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, ரத்தினம் ஆகியோரின் மருமகனும், சதீஸ்வரனின் (Germany) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் (U.K) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவனேசன் மல்லிகாதேவி,
சி. திருக்குமார்,
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
(சகோதரர்கள்)

கண்ணகிபுரம்,
ஏழாலைமத்தி, ஏழாலை.

(91692)

## செல்லப்பா குமாரவேலு

### (மலாயன் பென்சனியர்)

உரும்பிராய் வடக்கு கேசனையைப் பிறப்பிடமாகவும் மருதனார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா குமாரவேலு நேற்று (28.08.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா – தெய்வானையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மாவின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சின்னம்மா காலஞ்சென்றவர்களான இராசம்மா, தங்கம்மா, பொன்னம்மா, பாக்கியம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரம் நடேசனின் (பாபு) பெரியப்பாவும் மயில்வாகனம் தருமலிங்கம் (நியூலிங்கம் மோட்டோர்ஸ், சுன்னாகம்) காலஞ்சென்ற கமலாம்பிகை செல்வரட்ணம் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.08.2001) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. செல்வராணி
(மனைவி)
பரம் நடேசன் (பாபு)
(பெறாமகன்)

"செல்வவில்லா"
மருதனார்மடம்
சுன்னாகம்.

(91682)

### ஆயுதப் போர் தொடங்குமுன் இருந்த

# சுமுகமான வாழ்வு நிலைமைக்கு நாம் திரும்பி முன்னேறவேண்டும்

## விளையாட்டு வீரர்கள் பாராட்டு நிகழ்வில் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஓக. 29

ஆயுதப்போர் தொடங்குவதற்குமுன்னர் மக்கள் எல்லோரும் வாழ்ந்திருந்த சுமுகமான சூழ்நிலைக்குத் திரும்பி அதில் இருந்து எமது மக்கள் முன்னேற வேண்டும். முன்னேற்றத்தில் புதிய எல்லைகளைத் தொட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற பதினேழாவது தேசிய தடகள விளையாட்டு விழாவில் பங்குபற்றிய விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் வெற்றிபெற்று புதிய சாதனைகளை நிலைநாட்டிய வீரர்களைப் பாராட்டும் முகமாகவும் நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா இப்படிக் கூறினார்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயுதப் போர் தொடங்குவதற்கு முன்பு மக்கள் எல்லோரும் வாழ்ந்திருந்த சுமுகமான சூழ்நிலைக்குத் திரும்பி அதிலிருந்து எமது மக்கள் முன்னேற வேண்டும். முன்னேற்றத்தில் புதிய எல்லைகளைத் தொட வேண்டும். இதற்காகவே ஈ.பி.டி.பியினராகிய நாங்கள் பாடுபடுகின்றோம். இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

உங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி இருக்கிறீர்கள். உங்களுக்குப் போதிய கால அவகாசம் இல்லாமல் இருந்திருக்கலாம். போதுமான பயிற்சி வசதிகள் கிட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால் இத்தடைகளைக் கடந்து செல்ல, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரின் முயற்சியும் உங்களின் ஒத்துழைப்பும் பயன்பட்டுள்ளது. இவ்வாறான ஒன்றுபட்ட உழைப்புக்கள் வெற்றியைத் தேடித் தரும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு.

எனினும், எங்களை நோக்கி சங்கிலியன் படைகளின் எச்சரிக்கைகள் வருகின்றன. இவற்றை நாம் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. எங்கள் சேவை தேவையானதா இல்லையா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மக்களுக்கு உதவுவதற்காகவே எமக்குப் பலம் தேவைப்படுகிறது. அதற்காகவே எமக்கு அதிகாரம் தேவைப்படுகின்றது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி. தகேந்திரன் (ஜெகன்) உரையாற்றுகையில்—இந்த வெற்றிக் கேடயங்களை பார்க்கும்போது உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் எம்மவர்கள் ஈட்டி வருகின்ற வெற்றிகளை எமது மண்ணில் இருக்கின்ற ஊடகவியலாளர்கள் கண்டு கொள்வதாக இல்லை இந்தகைய வெற்றிகளைப் பாராட்டுவதாகவும் இல்லை.

இந்த வெற்றிகள் அழிவுக்கு வழிகாட்டவில்லை. மாறாக உங்களது எதிர்காலம் பிரகாசிக்கவும் உதவுகின்றன. ஆனால் இவற்றைப் பாராட்டத்தயங்குபவர்கள் அழிப்பு வேலைகளுக்கு வெற்றிமாலை சூட்டுகின்றனர். எனினும் அவ் வெற்றிகள் வெறும் நீர்க்குமிழிகளே என்வும் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் மாகாண மட்ட போட்டிகளில் பங்கேற்ற விளையட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் கேடங்களும் பாராட்டு சான்றிதழ்களும் ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டன. மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம், கப்டன் ஏ. எஸ். குணசிங்கம் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.— இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

குருநகர், ஓக. 29

யாழ். உதைபந்தாட்ட லீக் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் தலைவர் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4-30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் வி. கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் வி. கழகம் மோதவுள்ளது.

[க-51]

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக்கழகம் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி. க. எதிர் அராலி பாரதி வி. க.

★ புன்னாலைக்கட்டுவன் கலைமகள் வி. க. எதிர் தாவடி காளியம்மாள் வி. க.

(க-86)

## நவாலியில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 29

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் நவாலி மதிஒளி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மதிஒளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பியின் மானிப்பாய் அமைப்பாளருமான வெவிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்வார்.

(க-3)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஓக. 29

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 267 தபால்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 32 தபால் பொதிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-6)

## திருப்பலி

யாழ். அடைக்கல அன்னை ஆலய திருவிழா திருப்பலிகள் நாளை வியாழக்கிழமை காலை 6-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 7-30 மணிக்கு பெருவிழா திருப்பலியுடன் முடிவுறும்.

(ச-6-51)

## துர்க்காதேவி தேர் நாளை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தேர் உற்சவம் நாளை வியாழக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் சப்பரத் திருவிழா இடம்பெறும்.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் அடியார்கள் வருவதற்கு வசதியாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையினர் விசேட பஸ் சேவைகளை நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர்.

தனியார் மினிபஸ் சங்கத்தினரும் மேலதிக சேவைகளை நடத்தவுள்ளனர்.

சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ஸ்தாபனத்தினர் தயாரித்து வழங்கும் தெல்லிப்பூர் ஸ்ரீ துர்க்காதேவி தேர் விழா சிறப்பு மலர் நாளைய உற்சவ தினம் பிரசுரமாகிறது.

(க-86)

### வன்னி செல்ல அனுமதி கிடைக்காததால்

# விடுதலையான 2பேர் தொடர்ந்து சிறைச்சாலையில் வாடும் அவலம்

யாழ்ப்பாணம், ஓக. 29

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இருவரை வன்னிக்கு அழைத்துச் சென்று, உறவினர்களிடம் ஒப்படைப்பதற்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் அவர்கள் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தோமஸ் ராஜ்குமார் (நந்திக்கடல், புதுக்குடியிருப்பு), இராமசாமி ரேனுகா (அக்கராயன் குளம், கிளிநொச்சி) ஆகிய இருவருமே விடுதலை கிடைத்தும் சிறையில் வாடும் அவலம் தொடர்கிறது.

இவர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்திய சமயம் வன்னிக்கு அனுப்பும்வரை யாழ். சிறைச்சாலையில் தங்கவைக்குமாறும் எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் நீதிவான் ஆர். ரி. விக்னராஜா பணித்தார்.

(க-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இராசதுரை குபேந்திராவின் விசேட அ.அ. (இல.0902014446) எய்ரான்லிக் கல்லூரிக்கும் கடுக்காயடி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா.இராசதுரை, 31,கடுக்காயடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.(91659)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட், சேவல் மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91680)

புறொயிலர் கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (91647)

## கார் விற்பனைக்கு

11 சிறி இலக்க தொடரிலுள்ள டொயட்டா கொரலா கார் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு:- அ.டொ. அரியரஞ்சன், "புஸ்பா இல்லம்", புலோலி மேற்கு. (கிராமக்கோட்டு சந்திக்கு அருகில்) (91693)

## ENGLISH

**O/L, A/L, G.A.Q, B.A.** மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (91665)

## A/L LOGIC

2002, 2003 கல்வியாண்டுக்கான அளவையியல் பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்பு:- **K.Baba,** சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (91681)

## தேவை

சுத்தமான வேப்பங்கொட்டை தேவை. தொடர்பு:- மில்க்வைற், யாழ்ப்பாணம். (91672)

## திருமண சேவை

1965ஆம் ஆண்டு திருவாதிரை நட்சத்திரம், வைத்தியராக வேலை பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் தேவை. **A/L** படித்திருந்தால் போதும். ஜாதகம் படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, இல.178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (91691)

## விற்பனைக்கு

கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுமுடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:சி.சிறீகணேசன், பரணி மருந்தகம், காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் (தாவடிச் சந்திக்கருகில்) (91684)

**14" 80 Black Screen, National** கலர் **T.V.** ஒன்றும் புதிய கிளச் மொடல் **YAMAHA 50 (JAPAN)** மோட்டார் சைக்கிள் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. கிழமை நாள்களில் பி.ப. 4.00 மணிக்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு:- இல.28, வளாக வீதி, திருநெல்வேலி. (91639)

மிக நல்ல நிலையிலுள்ள சிசில் **RX 60, RX 80** குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (91686)

## பிறிமா குஞ்சுகள்

**PRIMA** புறொயிலர் குஞ்சுகளும் **PRIMA HI LINE** சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும் **GREEN VALLEY** புறொயிலர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. விலை: 48ரூபா. தொடர்பு:- வை.சிவகுமார், இல. 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தியடி/ ரஞ்சிதன், மாலிச்சந்தி, அல்வாய். (91653)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள புதிய **Super Cup - 50, Self Start Honda.** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ.செல்வரஞ்சன், கன்பொல்லை வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (91696)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

அச்சுவேலி பண்ணையின் ஒரு நாள் புறொயிலர் குஞ்சுகள் 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 43/=. முன்கூட்டியே பணத்தைச் செலுத்திப் பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு:- 123, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (91660)

## வீடு, காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் (மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில்) இரண்டு வீடுகளுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பி.கு.விக்கி, இல.7, செட்டித்தெரு, நல்லூர். (91690)

## வெற்றுப் போத்தல்கள் தேவை.

பனம் சாராயம் அடைப்பதற்காக ஒரு போத்தல் கொள்ளளவு உடைய (750 மி.லீ.) வெற்று மெண்டிஸ் போத்தல்கள் தேவை.

கொள்வனவு செய்து தரக்கூடிய விற்பனை முகவர்கள் தொடர்புகொள்ளவும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ப.இரவீந்திரன்
பொது முகாமையாளர்,
திக்கம் வடிசாலை,
அல்வாய்.

(C/18044)

# மரண அறிவித்தல்

## சிவசம்பு வேலாயுதம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், தம்பாலையை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு வேலாயுதம் நேற்று (28-08-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணம் மற்றும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஆனந்தநடராசா, சாவித்திரி, பவளக்கொடி, தவமலர் (ஜேர்மனி), சிவலிங்கம் (ஜேர்மனி), சிவமலர், தவலிங்கம் (ஜேர்மனி), அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமி, தருமராசா, சுந்தரலிங்கம், சிவபாதம் (ஜேர்மனி), கிரகராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் சுதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பகீஸ்வரன், அனுசா, சியாமளா, கேதீஸ்வரன், ரதீஸ்வரன், நதீஸ்வரன், மதன்யா, தனேஸ்வரன் (லண்டன்), காண்டீபன், மோகன், சுதர்சன், சுரேஸ்குமார் (ஜேர்மனி), சுயேன்குமார், தமிழ்ச்செல்வி, ரேவதி (லண்டன்), றொபின்சன் (ஜேர்மனி), நிலக்கரன் (ஜேர்மனி), பவானி (ஜேர்மனி), ஜெனனி (ஜேர்மனி), நிஷானி, தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.08.2001) புதன்கிழமை காலை 10 மணிக்கு தம்பாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தம்பாலை இந்து மயானத்துக்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*முகவரி:-*
*பலாலி விமானநிலைய வீதி,*
*தம்பாலை,*
*அச்சுவேலி.*

தகவல்:-
ஆனந்தநடராசா (மகன்),
தருமராசா (மருமகன்).

(91700)

## 'மைற்ஸ்' களைகொல்லி தெளிக்க நடவடிக்கை

வடமராட்சி,ஓக.29

வடமராட்சிப் பிரதேசத்தில் தென்னை மரங்களுக்கு 'மைற்ஸ்' பீடை களைகொல்லி தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

வீடுகளில் வளர்க்கப்படும் தென்னை மரங்களில் 'மைற்ஸ்' பீடை ஏற்படாதிருக்க கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக 'மைற்ஸ்' பீடைகொல்லி தெளிக்கப்படும்.

இதற்குத் தேவையான களைகொல்லியும், கையடக்கமான தெளிகருவிகளும் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. (ம-173)

உ
ஓம் கணபதி துணை
அரியாலை நீர்நொச்சித் தாழ்வு

## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான அறிவித்தல்

இடப்பெயர்வு காரணமாக தடைப்பட்டிருந்த மேற்படி ஆலயத்தின் பூசைகள் மீண்டும் விஷு வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் நாளை (30-08-2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து தினந்தோறும் காலை 10.00 மணிக்கு ஒரு நேர நித்திய பூசையாக நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

இச் செய்தியை விநாயக அடியார்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

*அரியாலை.* - நிர்வாகசபை.

(91699)

# பருத்தித்துறை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் பகுதி I இல் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வேலை அமைந்துள்ள இடம் தமது செயற்பாட்டுக்கு உட்பட்டது என உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினரும், பகுதி II இல் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**படிவ விநியோகம் - 06-09-2001 ஆந்திகதி பிற்பகல் 15.00 மணிவரை**
**படிவ ஏற்றல் - 07-09-2001 ஆந்திகதி பிற்பகல் 12.00 மணிவரை**
**படிவம் திறத்தல் - 07-09-2001 ஆந்திகதி பிற்பகல் 02.00 மணிக்கு**

### அட்டவணை

| வேலை விவரம் | படிவக்கட்டணம் | மீளளிக்கக்கூடிய வைப்பு |
|---|---|---|
| பகுதி I | | |
| 01. கெருடாவில் விவேகானந்தா ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 02. அல்வாய் இளம்பிறை ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 03. வத்தனை கலைவாணி ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 04. புலோலி வடமேற்கு அறிவகம் ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 05. பொலிகண்டி அம்பிகை ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 06. குடத்தனை சுடரொளி ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 07. பருத்தித்துறை இன்பருட்டி ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 08. கெருடாவில் அண்ணா ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 09. துன்னாலை வடக்கு வல்லியானந்தா ச.ச.நிலையம் புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 5000.00 |
| 10. சுப்பர் மடம் சித்தி விநாயகர் முன்பள்ளி தளபாட விநியோகம் | 100/- ம் பொ.சே.வரியும் | 500.00 |
| 11. கற்கோவளம் முன்பள்ளி தளபாட விநியோகம் | 100/- ம் பொ.சே.வரியும் | 800.00 |
| 12. அல்வாய் நக்கீரன் முன்பள்ளி தளபாட விநியோகம் | 100/- ம் பொ.சே.வரியும் | 500.00 |
| 13. கூவில் தீபஜோதி முன்பள்ளி கட்டடம் அமைத்தல் | 100/- ம் பொ.சே.வரியும் | 1500.00 |
| பகுதி II | | |
| 01. கெருடாவில் பாடசாலை வீதி திருத்தம் | 100/- ம் பொ.சே.வரியும் | 2000.00 |
| 02. கொற்றாவத்தை பூமகள் வீதி (பகுதி 1) புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 03. மாயக்கை தெனியம்மன் வீதி புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 04. அல்வாய் பழைய வேதக் கோயில் வீதி புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 05. மணற்காடு (பகுதி 2) புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 06. குடத்தனை கரிக்கோப்பு வீதி (பகுதி 2) புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 07. கெருடாவில் காட்டுப்புலம் வீதி புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 08. கதிரவேற்பிள்ளை வீதி (பகுதி 2) புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 09. திக்கம் நெல்லியோடை வீதி (பகுதி 2) புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 1000.00 |
| 10. குடத்தனை புதிய நூலக விஸ்தரிப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 2000.00 |
| 11. கருகம்பன் சுடலை புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 7000.00 |
| 12. கற்கோவளம் பொதுச்சந்தை புனரமைப்பு | 100/- ம் பொ.சே.வரியும் | 10000.00 |
| 13. குடத்தனை தாங்குசுவர் அமைத்தல் | 100/- ம் பொ.சே.வரியும் | 2000.00 |

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரை இட்டப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு *'தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி'* என்ற முகவரிக்கு பதிவுஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யு.எம்.
தலைவர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

*பருத்தித்துறை பிரதேச சபை.*
*தலைமை அலுவலகம்.*
*27-08-2001*

(C/18045)

# இக்கட்டு நிலையிலிருந்து மீள்வதற்கு பொதுத் தேர்தல் நடத்துவதே ஒரேவழி!

## ரவூப் ஹக்கீம் கூறும் ஆலோசனை

கொழும்பு,ஓக.19

"தற்சமயம் உருவாகியுள்ள இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கு பொதுத் தேர்தல் நடத்துவதே ஒரே வழி" என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலை தொடர்பாக செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகத்தை அப்பட்டமாக மீறிக் கொண்டு செயற்படும் அரசு, நாட்டுப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகக் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. ஊசலாடிக் கொண்டுள்ள அரசு, தனது ஆயுள் காலத்தை நீடித்துக் கொள்வதற்காகவே ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.

நாடாளுமன்றத்தைக் கூட்டினால் தமது கட்சிக்குள் உள்ள முறுகல் நிலைமை - குளறுபடிகள் அம்பலத்துக்கு வந்துவிடும் என்று அரசு அஞ்சுகின்றது.

நாடாளுமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் பதில் கூறக் கூடிய ஜனாதிபதி முறையே வேண்டும். அதையே எமது கட்சி விரும்புகின்றது - என்றார். (க-3)



உ
சிவமயம்

தென்கோவை இருபாலை

**அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்**

நூதன நவக்கிரக மூர்த்திகள்

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**கர்மாரம்பம்** - 28-08-2001 அதிகாலை 5.00 மணி

**எண்ணெய்க்காப்பு** - 29-08-2001 புதன்கிழமை மு.ப. 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை.

**கும்பாபிஷேகம்** :- 30.08.2001 வியாழக்கிழமை காலை 6.05 - 7.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

சர்வபோதகாசிரியர்
**சிவஸ்ரீ அ.நடராஜக்குருக்கள்**
(அதிபர், சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி, நாயன்மார்க்கட்டு)

கும்பாபிஷேக பிரதமகுரு
**சிவஸ்ரீ ச.மாகாலிங்கசிவக் குருக்கள்**
(பிரதமகுரு, நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் தேவஸ்தானம்)

ஆலய பிரதமகுரு
**சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள்**

ஆசியுரைகள்
**சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி.சதாசிவசர்மா**
(விரிவுரையாளர், சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி)
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள**
(நல்லை ஆதீனம்)

**நவக்கிரக கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு**

சூரிய, சனீஸ்வர சகஸ்ர நாமமும்
நவக்கிரக தோத்திரங்களும்

வெளியிட்டு வைப்பவர் :- **சிவஸ்ரீ ச.வேதாரணியக் குருக்கள்** (தம்பசிட்டி)

முதற்பிரதி பெறுபவர் :- **சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள்** (பிரதம குரு, திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

கும்பாபிஷேக உபயம்:-
*சிவஸ்ரீ ந.தியாகராசக் குருக்கள் குடும்பம்.*
(வல்வெட்டித்துறை)

(91716)


**மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ்**

★இலங்கை போக்குவரத்து விதிகளுக்கு அமைவாக மருத்துவ சான்றிதழ் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

*தேவை:-* அரச உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்ற தாதிகள் உடன்தேவை. பயிற்சி பெற விரும்பும் (தாதிகள்/மருந்தகவேலை) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

'24 மணிநேர வைத்திய சேவையின் கீழ்'

**யாழ்.வைத்தியசாலை**

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (T.P - 3533 OR 3188) (91702)


தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்.

## கேள்வி கோரல்கள்

கீழ்க்காணும் விடயங்கள் சம்பந்தமாக கேள்வி கோரப்படுகின்றது.கூடிய கேள்வி கோருபவருக்கே வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கும், பார்வையிட விரும்புவோரும் தலைமைக் காரியாலயத்துடன் வேலை நேரத்தில் தொடர்புகொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) மில் காணி, கட்டடம் (உபகரணங்கள், இல்லாமல்) வருட குத்தகைக்கு விடுதல்.
(2) 24ஸ்ரீ இசூஸ் லொறிக்குரிய ஐந்து சில்வ் (புதிய) விற்பனை.
(3) லொறி பற்றறி 90 ஏ.எம்.பி. (நல்ல நிலையிலுள்ளது) விற்பனை.

மேற்படி கேள்விப் பத்திரங்களை சங்கத்தில் பெற்று யாவற்றையும் பூர்த்திசெய்து 10.09.2001ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரில் *'பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், (கொடிகாமம்), நெல்லியடி, கரவெட்டி.'* என்னும் விலாசத்தில் கிடைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.

(C/18049)

## மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.29

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவத்திற்குச் சென்ற ஒருவர் வீதியில் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிள் கடந்த சனிக்கிழமை திருட்டுப்போயுள்ளது.

புலோலி மேற்கைச் சேர்ந்த இராமு சனைகசபை என்பவரே மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தவர் ஆவார். இத்திருட்டு தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-117)

## சாரணர் அணி திரள்வு நிகழ்ச்சி

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்டக் கிளையின் வருடாந்த சாரணர் அணி திரள்வு நிகழ்வு இன்று புதன்கிழமை தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் கோ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார். (க-118)

## சிப்பாய் பலி

கிளாலிப் பகுதியில் கடந்த ஞாயிறுக்கிழமை காலை இடம்பெற்ற மோதலை அடுத்து, இரவு வேவு பார்ப்பதற்காக முன்னரங்க பாதுகாப்பு அரணுக்கு வெளியே சென்ற சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

கேகாலை அரநாயக்காவைச் சேர்ந்த எல்.காமினி (வயது 30) என்ற சிப்பாயே மரணமானவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து நீதிவான் அ.பிரேம்சங்கர் அவ்விடத்துக்குச் சென்று மரண விசாரணையை நடத்தினார்.

சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (சு-117)


**IBS** கல்வி நிறுவனம்

அநேக பெற்றோர்,மாணவர்களது வேண்டுகோளுக்கிணங்க
**புதிய அனுமதிகள்**
தரம் 6 முதல் O/L வரை
**இதுவே இறுதிச் சந்தர்ப்பம்!**
தரம் 4 புலமைப்பரிசில் வகுப்பும், பரீட்சையும் நடைபெறுகின்றன.
(91676)

**நடன முருகன் வைத்திய நிலையம்**
சத்திரக்குச் சந்தி-யாழ்ப்பாணம்.
**பார்வையிடும் நேரம்:**
காலை: 8.30 - 2.00 மணிவரை.
மாலை: 3.30 - 7.00 மணிவரை.
**டாக்டர் க.நவரத்தினம்**
தொலைபேசி: 021-3635
(91697)

**லஷ்சுமி**
இன்று முதல்
சரத்குமார், குஷ்பு, ஆனந்தராஜ் நடித்த
**சிம்மராசி** (சீஸ்ஸ்)
தினசரி - 10.30, 2.30 (ப.தே.)
வெள்ளி, சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30
(91715)

**நாகம்மாள்** சுன்னாகம்
மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த
**டும் டும் டும்** (சீஸ்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91701)

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித், மாளவிகா நடிப்பில
**உன்னைத்தேடி**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(ப.தே.)
(C/17875)


விண்ணக வாழ்வின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

(R.T.P)



அன்னை மடியில் 16 - 02 - 1926

ஆண்டவன் அரவணைப்பில் 30 - 07 - 2001

**செல்வி மேரி யோசவின் அருளப்பு** (பொன்றோஸ்)

(இளைப்பாறிய ஆசிரியை - இளவாலை)

"நித்திய பேரின்பவாழ்வை இவருக்கு அளித்தருளும் இறைவா சமாதானத்தில் இளைப்பாறுவாராக"

அன்பே உருவான அம்மணியே பொன்றோசா
இன்ப மலரே உன் பணிவாழ்வைப் போற்றுகிறோம்
மாத்தளை, இளவாலை மகவித்தியாலயங்கள்
சிறப்புறவே கல்விப்பணி சிந்தையுடன் ஆற்றினீர்.
இளைப்பாறிய பின்பும் இறைபணியை மேற்கொண்டீர்
இளவாலைப்பதியின் புனித அன்னாள் ஆலயத்தில்
இறைபணிக்காய் ஆற்றியவுன் இணையற்ற சேவைகள்
என்றும் எம் நெஞ்சில் நின்று நிழலாடுதம்மா
பண்பும் பரிவும் பக்தியும் பூண்ட உமை
விண்ணுலகேற்றிடவே விமலனை வேண்டுகின்றோம்.

இவர் பிரிவால் நெஞ்சம் நெகிழ்ந்துருகும்
குடும்பத்தினரும்
இளவாலை, புனித அன்னம்மாள் ஆலய பரிபாலன சபையினரும்

*தம்மனை, இளவாலை.* (91714)

## கண்ணீர் அஞ்சலி

### சபாபதி திருநாவுக்கரசு

*(ரவர் மில் மில் உரிமையாளர்; கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் தேவஸ்தான கணக்கு பரிசோதகர்)*

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் பாதார விந்தங்களில் அன்னாரின் ஆத்மா மன்று சேரப் பிரார்த்தித்து எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பரிபாலனசபையினர்.
யாழ்/வண்.கிழக்கு கலட்டி
எச்சாட்டி மகாமாரியம்மன் தேவஸ்தானம்.
(91719)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் நெசவுப் போதனாசிரியை
**செல்வி இரத்தினம்மா நடராசாவின்**
அன்புத் தாயார்

### திருமதி இராசம்மா நடராசா

காலமானதைக் கேள்வியுற்று துயரில் அடைந்தோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*வலி.தெற்கு, உடுவில்.*

பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
(91720)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
இணுவில் மேற்கு கிராம அலுவலர்
**திரு. கந்தையா இரவீந்திரன்** அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி நடராசா நாகம்மா

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

காலமானதைக் கேள்வியுற்று துயரில் அடைந்தோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*வலி.தெற்கு, உடுவில்.*

பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
(91710)

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புதம் சிவராஜசிங்கம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் ஆனந்தவாசா, பண்டத்தரிப்பு தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி அற்புதம் சிவராஜசிங்கம் நேற்று (28.08.2001) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேகதாசன் தம்பதியினரின் அன்பு மகளும் சிவராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் லெனின்ராஜ், ஜெயராஜ் (YOUTH FOR CHRIST), வைன்ராஜ் (ஜேர்மனி), சுகுணராஜ் (BLNARY ACCESS),ராஜ் கண்ணா ஆகியோரின் அன்புத் தாயாரும் எனி, சசி, நெலுனிக்கா ஆகியோரின் மாமியாரும் ஜெயராஜ், நடாஷா, சந்தோஷ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-08-2001) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆராதனையின் பின்னர் இல.80, Walls Lane, Colombo -15 இலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக மாதம்பிட்டிய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No.80,Walls Lane,*
*Colombo - 15.*
*Tel.No. - 01 522150*

தகவல்:
அ.மோ.இதயன்
(YOUTH FOR CHRIST)

(91708)

## துறைமுகக் காப்புறுதிக் கட்டண விவகாரம்

# அமைச்சர் ரொனியை முந்திக்கொண்டு லண்டனில் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழர்!

லண்டன்,ஓக.29

இலங்கை வரும் கப்பல்களுக்கான யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான பேச்சுக்களை நடத்த ஸ்ரீலங்கா அமைச்சர் ரொனி டி மெல் தலைமையிலான குழு லண்டன் வருவதற்கு முன்னர் -

கட்டுநாயக்காத் தாக்குதல் தொடர்பான விபரங்கள் அடங்கிய கறுப்பு மற்றும் சாம்பல் நிறத்திலான பிரசாரப் பொதி ஒன்று அங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இணையத் தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கனடாவில் இருந்து லண்டன் வந்த தீவிரவாதத் தமிழ் குழு ஒன்றின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இந்தப் பிரசாரப் பொதியை அவர்களுக்கு வழங்கினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இணையத்தளம் ஒன்றை நடத்திவரும் அவர், யுத்த அபாயப் பிரதேசமாக இலங்கை விளங்கி வருகின்றது என்ற பிரசாரத்தையும் அங்கு முக்கியமாக மேற்கொண்டார் என்று கூறப்பட்டது.

இலங்கையில் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளதால் யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணத்தைக் குறைக்க வேண்டாம் என்று அவர் அதிகாரிகளைக் கோரியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

கனடாவில் இயங்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பல அமைப்புக்களை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படவைக்கும் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

# சாவகச்சேரிப் பகுதி வீட்டில் 3 எலும்புக்கூடுகள் மீட்பு!

தென்மராட்சி,ஓக.29

சாவகச்சேரி கண்டுவில் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்றவேளையில் வீட்டினுள் மூன்று மனித எலும்புக்கூடுகளைக் கண்ட வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரி நகர்ப் பகுதி கிராம அலுவலருக்கு அறிவித்துள்ள சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதனையடுத்து கிராம அலுவலர் வை. இராசரத்தினம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலீஸாருடன் அவ்விடத்துக்குச் சென்று எலும்புக் கூடுகளை மீட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எலும்புக்கூடுகளில் இலக்கத் தகடுகளும் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. (க-117)

# ஜனாதிபதி ஹக்கீமுடன் பேசுவார்?

கொழும்பு,ஓக.29

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் அக்கட்சியுடன் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்த விருப்பதாக 'லக்பிம' சிங்களப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையில் இருந்து அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியால் வெளியேற்றப்பட்ட பின்னர், இப்போதே அவரைப் பேச்சுக்கு அழைத்திருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது விடயமாக ரவூப் ஹக்கீமுடன் நேற்றிரவு 'உதயன்' தொடர்பு கொண்டபோது, ஜனாதிபதியிடம் இருந்து உத்தியோகபூர்வமான அழைப்பு ஏதும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக் குறித்து தமக்கு ஏதும் தெரியாது என்றும் அவர் கூறினார். (க-3)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வவுனியா ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த விநாசித்தம்பி பிரகசூரி (வயது43) என்பவரும் கடந்த 24 ஆம் திகதிமுதல் காணாமற் போயுள்ளார் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

### அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினர்.

அரசமைப்பில் குறிப்பிடப்படாத இத்தகைய (உப - ஜனாதிபதி) பதவி ஒன்றை உருவாக்கி வழங்குவதை ஆதரிக்க முடியாது என்று ஐ.தே.க.பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இரு தரப்பு யோசனைகள் குறித்தும் தத்தமது தலைவர்களுடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக இரு தரப்புப் பிரதிநிதிகளும் நேற்று மாலை தங்களது சந்திப்பை இடைநிறுத்தி விட்டு தத்தமது தலைவர்களிடம் விரைந்தனர்.

மீண்டும் நேற்றிரவு 9 மணிக்கு அவர்கள் கூடினர். சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் வற்புறுத்தப்பட்ட கோரிக்கைகளை மற்றைய தரப்பு ஏற்கவில்லை என்பது அந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து -

அடுத்த 15 நிமிடத்தில் - 9.15 மணிக்கு - பேச்சுக்கள் பயனளிக்காத நிலையில் பிரதிநிதிகள் பேச்சுக்களை முடித்துக்கொண்டு புறப்பட்டனர். (உ-3-9)

### மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள மத்திய முகாம் பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் படைத் தளங்களிலும் பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாவியில் இரவு வேளையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. (க-9)

### தென்மராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

குருநகர்ப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இராணுவத்தினரது சுற்றி வளைப்பிலிருந்து தப்பிச் செல்ல முடியாத நிலையில் தமது போராளிகள் இருவர் தமக்குத் தாமே குண்டுகளை வெடிக்க வைத்து உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப். இளங்குமரன் (அன்ரனி அன்ரனி யோன்சன் - யாழ்ப்பாணம்), 2 ஆம் லெப். நகுலன் (மரியான்துரம் ஜேசுதாஸதுரம் - மன்னார்) ஆகியோரே உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெடிவைத்தகல் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது தமது தரப்பில் கலைமதி (கிருத்திராசா மேரி பிலோமினா - யாழ்ப்பாணம்) என்பவரும் உயிரிழந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(க-9)


INFOTECH · JAFF 2001

வடக்கின் மாபெரும்

கணனிக் கண்காட்சி

தகவல் தொழில்நுட்பத்தின் நவீன பரிமாணங்களை எடுத்துக் காட்டும்வகையில் சர்வதேச கணனி உற்பத்தி, விற்பனை நிறுவனங்களுடன் இணைந்து IIS நிறுவனம் பெரும் எடுப்பில் நடத்தவிருக்கும் INFOTECH - JAFF 2001 கணனிக் கண்காட்சி.

இடம் : IIS தலைமை நிறுவனம்
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

காலம் : September 14,15,16 திகதிகளில்

நவீன கணனி யுகத்தின் விந்தைகள் பலவற்றை நீங்கள் நேரில் கண்டு களிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

மேலும் பல......

- சர்வதேச கணனி உற்பத்தி நிறுவனங்களின் காட்சியறைகள்
- கணனி தொழில்நுட்பக் கல்வியை இலவசமாக அல்லது மிகக் குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ள அரிய வாய்ப்பு

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

இக்கண்காட்சியினூடாக நீங்கள் தகவல் தொழில்நுட்ப அறிவில்ஒரு படி உயர்ந்து கொள்ளுங்கள்.

IIS
Institute of Informatics Studies
100, Clock Tower Road,
Jaffna, Sri Lanka. (C-18047)



கணக்கீடு

A/L 2002

ஒப்படைக் கலைக்கு

ஆரம்பம்:- நாளை 3 p.m.

S.தவா

B.Com. (Hons) (Acc.Spl) (91717)

SHAMROCK
Temple Road, Jaffna.


# தரம் குன்றிய உலர் உணவு வழங்கினால் முறையிடுங்கள்

## பிரதேச சபைத் தலைவர் அறிவுறுத்து

நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவு வகைகள் தரம் குறைந்தவையாகக் காணப்பட்டால் அதுபற்றி உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய ஆணையாளர் பொறுப்புகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. நிவாரண உலர்உணவுப் பொருள்களின் தரம் பேணப்படவேண்டும். தரக் குறைவான உலர்உணவுகள் வழங்கப்பட்டால், உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு கிராம சேவையாளர்கள் மூலம் அல்லது சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் எமக்கு உடனடியாக அறிவியுங்கள்.

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை - ச.ச.நிலைய கண்ணன் சிறுவர் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே க.கமலசேகரன் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் விளையாட்டுகள் நடைபெற்றன. (க-152)

### வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துகின்றது.

அதன் இறுதி நாளான சனிக்கிழமையன்று, அரச சார்பற்ற நிறுவனங்களில் சர்வதேச பிரகடனமும், விரிவான செயற்றிட்ட அட்டவணையும் அங்கு நிறைவேற்றப்படும்.

அதற்கான நகல் பிரகடனத்திலேயே இலங்கையின் வடக்கு - கிழக்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சனியன்று நிறைவேற்றப்படவிருக்கும் நகல் பிரகடனத்தின் இரண்டாவது அத்தியாயம், இனவாதத்தால் பாதிப்புற்றோர், இனவாத ஒடுக்குமுறை, அந்நிய ஆதிக்கம், சகிக்க இயலாத பாதிப்புகள் ஆகியவை குறித்து பிரஸ்தாபிக்கின்றது.

அதன் உப பிரிவு ஒன்றில் "அந்நியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட மக்கள்" குறித்து ஆறு பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் முதலாவது பந்தியில் பெரும் பகுதி இந்தியா, திபெத் நிலைமைகளை ஆராய்கின்றது. அதில் இலங்கை குறித்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

"அந்நியப் படையின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக, ஆக்கிரமிப்புக்குட்பட்ட மக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் முற்றிலும் மீறப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்ளும் அதே நேரம் சிறிலங்காவின் வடக்குக் கிழக்கில் உள்ள அந்த மக்களுக்கு எமது ஐக்கிய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனியன்று நிறைவேற்றப்படுவதற்குத் தயாராக இருக்கும் இந்தப் பிரகடனம் மற்றும் அதன் வாசகங்கள் குறித்து 'த ஹிண்டு' பத்திரிகை முக்கியத்துவம் குறித்து செய்திகளை பிரசுரித்துள்ளது.

இதேவேளை -

ஐ.நாவின் ஏற்பாட்டில் நடக்கும் இனவாதத்துக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் பங்கு பறாமல் பகிஷ்கரிப்பார் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதனை அமெரிக்காவின் மனித உரிமை ஆர்வலரான வண.ஜெஸி ஜக்ஸன் வன்மையான கண்டனத்துடன் விமர்சித்துள்ளார்.

"இன நீதி நிலைநாட்டப்படும் முயற்சியில் பங்களிக்கும் வாய்ப்பை அமெரிக்கா இழக்கின்றது" - என்று அவர் தெரிவித்துள்ளார். (உ)


A/L-2001

பொது சாதாரண பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

| ஆரம்பம்: 30-08-2001 (நாளை) | ஆசிரியர்:த.தவசேகர் | |
| --- | --- | --- |
| இடம் | நேரம் | குறிப்பு:- வகுப்புகள் 30ஆம், 31ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெறும். (91698) |
| DMI - யாழ் | காலை 8 மணி | |
| EESAN - கோண்டாவில | காலை 11 மணி | |
| BITSMAN - மானிப்பாய் | மாலை 3மணி | |


## மென்பந்து 'கிறிக்கெற்' சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தால் நடத்தப்படும் 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து 'கிறிக்கெற்' சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்போட்டிக்கு அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பன கலந்து கொள்ளலாம்.

*விண்ணப்ப இறுதித்திகதி: – 10. 09. 2001 திங்கட்கிழமை மாலை 4. 00 மணி.*

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை ரூபா 150/= செலுத்தி செயலக விளையாட்டுத்துறை செயலரிடமிருந்து அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.*
*யாழ்ப்பாணம்.*

(C/18048)

## மரண அறிவித்தல்

### சபாபதி திருநாவுக்கரசு

(Tower Builders உரிமையாளரும் அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும், யாழ். தட்டாதெருச் சந்தி கலாஜோதி சனசமூக நிலையம், இளைஞர் ஒன்றியம் ஆகியவற்றின் பெரும் தலைவர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி திருநாவுக்கரசு 25-08-2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகரத்தினம் (பூரணம்) அவர்களின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், யாதவன் (U.K.), யாழினி (மக்கள் வங்கி, காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மயில்வாகனம் மற்றும் சுப்பிரமணியம் (இந்தியா), விஜயலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-08-2001) புதன்கிழமை காலை 11.00 (இ.நே.) மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*"ஆயர்பாடி"*
*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
தி.யாதவன் (மகன்)
தி.யாழினி (மகள்)
(மக்கள்வங்கி,காங்கேசன்துறை)

(91712)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.